# தாயகம்

கலை இலக்கிய மாத இதழ்

# 4

974

ஆடி

விலை சதம் 75

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு

# சுதந்திரம் பெற்றோம்......?

-ஏகலைவன்

காற்றுக் கொதுங்கியவரால்
கைப்பற்றப் பட்டவர் நாம்
போர்த்துக் கீசருக்கும்
போனடச்சுக் காரருக்கும்
ஆங்கிலேயருக்கும்
அடிமையாக்கப் பட்டவர் நாம்.

நாற்பத்தி எட்டினிலே
நாம் பெற்ற சுதந்திரம்
உற்பத்தி ஆண்டினிலும்
உயர் வந்து சேரவில்லை?
பேர்பெற்ற மேதைகளால்
பெற்றுவிட்ட சுதந்திரம்
பெயரளவுச் சுதந்திரந்தான்
பெறுமதிகள் எதுவுமில்லை.

கற்பித்த குருக்களுக்கு
கால்பிடித்து நின்ற
ஒரு அப்பனாலும் பிள்ளையாலும்
அடக்கியாழப் பட்டவர் நாம்
அழுத்தியே இதைச் சொன்ன
அறிஞர்? ஒருவரில்லை
அடுத்து ஒரு சுதந்திரத்தை
அமைதியாய் பெற்றவர் நாம்

அவர் போன பிற்பாடு
அம்மணியும் வந்தெமக்கு
அரிய தொரு சுதந்திரத்தை
அளித்துவிட்டார் குடியரசாய்.

ஐந்தாறு தேர்தல்கள்
வந்துமென்ன போயுமென்ன
ஐயாக்கள் அம்மாக்கள்
ஆண்டது தான் கண்டமிச்சம்

கண்டமிச்சம் என்னவெனில்
மந்திரிமார்களோ
வெளிநாட்டில் விருந்தோம்பிட
மக்களோ...
உள்விட்டினில் குடம்சோர்ந்திட
பாண்கியூவினில்
பிள்ளைகள் காய்ந்திட
பசித்துக்களைத்தவர்
மயங்கியே வீழ்ந்திட.
மலையக மக்கள்
புற்களைத் தின்றிட
வந்துமே விட்டதாம்
மக்களின் ஆட்சி...?
பட்டினிச் சாவுதானோ?
பாளிமெந்து சோசலிசம்?
பார்த்தே கேட்கிறார்
பாட்டாளி மக்களெல்லாம்.

அன்னியர்கள் எமைவிட்டு
அகன்றிட்டார் ஆனாலும்
அன்னவரின் ஆதிக்கம்
அழியவில்லை அதனாலே
என்ன இவர் சொன்னாலும்
எம் நிலைமை மாறாது
என்பதனை உணர்ந்துவிட்டோம்
ஏமாற இனிமாட்டோம்.

ஆலைத் தொழிலாளி
ஆர்த்தெழுந்த விவசாயி
வேலை கிடைக்காத
வாலிபர்கள் புத்திஜீவித்
தோழர்கள் ஓரணியாய்
சேர்ந்தெழுந்து நாமெல்லாம்
சாத்வீகப் பாதைக்கு
எதிரான பாதையிலே.
ஏகாதி பத்தியமாம்
நிலப்பிரபுத்துவமாம்
மூன்று கொடும் அரக்கரையும
சங்காரம் செய்யாமல்
சத்தியமாய் இங்கு
சுதந்திரந்தான் வந்திடாது.

தாயகம்

மலர்: 1 1974 ஆடி இதழ்: 4

# தேசிய ஒருமைப்பாடு

தேசிய ஒருமைப்பாடு..!

தேசிய ஒருமைப்பாடு என்ற கோஷம் அண்மைக் காலங்களில் உரத்து ஒலிக்கின்றது. தேசிய ஒருமைப்பாடு முற்றிலும் அவசியமானது.

தேசிய ஒருமைப்பாடு என்பதன் உண்மையான அர்த்தம் என்ன? யார் இதை முன்வைக்கின்றார்கள். ஏன் வைக்கின்றார்கள். இவை ஆராய்வுக்குரியவை?

தேசிய ஒருமைப்பாடு என்பது தேசிய இனப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டது.

தேசிய இனப் பிரச்சினை என்பது முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாத ஒரு சிக்கலான நெருக்கடி.

ஒரு தேசத்தில் வாழும் தேசிய இனங்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ சக்திகளின் போட்டியினால் இனப் பிரச்சினை கூர்மை அடைகின்றது. இவ் முதலாளித்துவ சக்திகள் தத்தமது சொந்த இனங்களைச் சுரண்டி அடக்குவதுடன் நில்லாது ஏனைய இனங்களையும் சுரண்டவும், அடக்கவும் முற்படுகின்றன.

இதனால் தேசிய இனங்களின் குடியுரிமை, மொழி உரிமை, பிரதேச உரிமை என்பவை திட்டமிட்டே மறுக்கப்படுவது அல்லது நிராகரிக்கப்படுவது போன்ற நிலைமைகள் உருவாகின்றன.

ஆளும் வர்க்கம் ஏனைய தேசிய இனங்களுக்கு எதிராக இன ஒடுக்கு முறைகளைக் கையாள்வதன் மூலம் பெரும்பான்மை இனத்தின் மத்தியில் தற்காலிகமான செல்வாக்கைப்

பெறுகின்றது. இதனால் தனது ஆட்சிப் பலத்தை நீடிக்க முயற்சிக்கின்றது.

இதனால் சிறுபான்மை இனங்களிடையே விரக்தியும், வெறுப்பும் தோன்றுகின்றன. இச்சந்தர்ப்பத்தை சிறுபான்மை இனங்களின் மத்தியில் உள்ள முதலாளித்துவ சக்திகள் தமது வர்க்க நலனுக்கு பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றன.

இக்கட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்கான கோஷம் எழுப்பப்படுகின்றது.

ஆனால் இக்கோஷத்தை இரண்டு நோக்கங்களுக்கு பயன்படுத்த முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஆளும் வர்க்கம் அன்றாடம் செய்துவரும் இன ஒடுக்கு முறைகளை மறைக்கவும், வர்க்க சமரசத்திற்குரிய, பாராளுமன்ற சந்தர்ப்பவாத மோசடியை மூடி மறைக்கவும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பைப் பாதுகாக்கும் நோக்குடன் முன்வைக்கப்படும் தேசிய ஒருமைப்பாடு என்ற கோஷம் போலியானதும், ஏமாற்றுத்தனமானதுமாகும்.

தேசிய இனப் பிரச்சனை உருவாகுவதற்கும், தேசிய ஒருமைப்பாடு சீர் குலைந்து செல்வதற்கும் உட்கருவாக அமைந்த அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெரு முதலாளித்துவம், ஆகியவற்றுக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் முன்னெடுப்பதற்கான நோக்கத்திற்கு தேசிய ஒருமைப்பாடு என்ற கோஷம் பயன்படுத்தப்படுவது முற்றிலும் சரியானதும், உண்மையான பலன் தரக்கூடியதுமாகும்.

முற்போக்கு இலக்கிய உலகில் தேசிய ஒருமைப்பாடு புதிய கோஷமல்ல. அன்றைய முற்போக்கு எழுத்தாளரின் முதுகெலும்பாகத் திகழ்ந்தவர்களின் ஒரு பகுதியினர் இன்று ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழல் இசைப்போராக மாறி தேசிய ஒருமைப்பாட்டை சுலபமாக ஒரு வைபவத்தின் மூலம் ஏற்படுத்தலாம் என்ற மயக்கத்தை கொடுப்பது பரிதாபத்திற்குரியது.

இன, மத பேதமின்றி அரசியல் ரீதியில் அடக்கப்பட்டும், பொருளாதார ரீதியில் சுரண்டப்பட்டும் வரும் சாதாரண சிங்கள-தமிழ்-முஸ்லிம் உழைக்கும் மக்கள் தம்மை தினம் இனம் ஒடுக்கி வரும் இன்றைய சமுதாய அமைப்பையும், அதன் எசமானர்களையும், இனம் கண்டு அவற்றுக்கெதிராக ஒரு ஐக்கியப்பட்ட பொதுப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதன் மூலம் அதாவது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி ஈட்டப்பட்டு இன ஒடுக்கு முறைகளுக்கான அடிப்படைகள் அகற்றப்படும் ஒரு கட்டத்தில்தான் தேசிய ஒருமைப்பாடு உருவாக முடியும்.

அத்தகைய தேசிய ஒருமைப்பாடே உண்மையான தேசிய ஒருமைப்பாடு.

— ஆசிரியர் குழு

ஒரு வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் எழுவதும், போராட்ட காலத்தில் வாழ்ந்துகொண்டு களமேகாது தப்புவதும், தற்காலத்தில் வாழ்ந்துகொண்டு வருங்காலத்தை முன்னிட்டு எழுதுவதும் விசித்திரமாகும். உண்மையான வாழ்க்கையில் இத்தகையோர் இல்லை... எதிர்காலம் நிகழ்காலத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே நிகழ் காலத்தில் அர்த்தமுடையவையே எதிர் காலத்திலும் அர்த்தமுடையனவாக இருக்கும்.

— லூசுன்

# தாயகம்

முகவரி

'தாயகம்'
54/16 ஆத்திசூடி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

★

**திருத்தம்**

அட்டையின் உட்பக்க கவிதையில் 'நிலப்பிரபுத்துவமாம்' என்ற வரிக்குக் கீழ் 'பெருமுதலாளித்துவமாம் என்றும், பாமரன் கவிதையில் காணப்படுகிற, செய்தநினைவ், பாடுவதால் என்று வரும் இடங்களில் காண்பதற்கு செய்திட்டே, பாடாமல் என்றும் சேர்த்துக் கொள்ளவும்.

படைப்பாளிகளிடமிருந்து தரமான படைப்புக்களை எதிர்பார்க்கிறோம். பிரசுரமாகும் படைப்புகளுக்கு படைத்தவர்களே பொறுப்பாளிகள்.

★

தாயகத்திற்கென அனுப்பப்படும் காசோலைகள், காசுக்கட்டளைகள், மணிஓடர்கள், என்பவை நிர்வாகி எனக்குறிப்பிடப்பட்டு 'தாயகம்' முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

★

**சந்தா விபரம்**

ஆண்டு சந்தா —10-00
ஆறு மாதம் — 5-00

# மலையக மண்சரிவும் மக்கள் சாவும்

— மகாவலி

சில நாட்களுக்கு முன் மலையகப் பகுதிகளில் பெருமழையும், அதைத் தொடர்ந்து பயங்கர மண் சரிவுகளும் ஏற்பட்டன. ஏறக் குறைய அறுபதுக்கு மேற்பட்ட உயிர்கள் இம்மண் சரிவுகளுக்கு பலியிடப்பட்டன. பலியிடப்பட்ட உயிர்கள் அத்தனையும் தோட்டத் தொழிலாளர்கள். இந்த அவலம் மிக்க சம்பவத்தை பத்திரிகைகளும், பிரமுகர்களும், ஏன் ஆட்சியின் தலைவர்களும் தாங்க முடியாத சோக நிகழ்ச்சி என வர்ணித்து இயற்கை வஞ்சித்துவிட்டது. விதி இவ்விதமாக விளையாடி விட்டது என மிகவும் சாதாரணமாகவே விஷயத்தை முடித்து விட்டனர்.

ஆனால் இம்மண் சரிவுகளுக்குப் பின்னால் உள்ள உண்மையான நிலைமைகளைக் கிட்டத்தட்ட எல்லோரும் மறைத்து விட்டனர் அல்லது மழுப்பி விட்டனர் என்றே கூற வேண்டும். ஓரிரு அரசியல் ஸ்தாபனங்களும் அதன் தலைவர்களும் மட்டும்தான் ஆணித்தரமான உண்மைகளை எடுத்துக் கூறி அந்நிலைமைகளை மாற்றுவதற்கான வழி முறைகளையும் கூறி உள்ளனர்.

எமது நாட்டில் காலத்துக்குக் காலம் ஏற்படும் வெள்ளப் பெருக்கும், மண் சரிவுகளும், வரட்சிகளும் இயற்கையின் கோளாறு அல்ல செயற்கையின் கோளாறு என்பதை இன்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைக்கு வந்துள்ளனர். எமது நாட்டின் மலையகப் பகுதிகளில் உள்ள வளமான காடுகள் அழிக்கப்பட்டதினால்தான் வெள்ளப் பெருக்குகளும், மண்சரிவுகளும், வரட்சியும் மாறி மாறி வருகின்றன. உயர்ந்த மலை முகடுகளில் உள்ள பெருமரங்கள் அழிக்கப்பட்டன. மலைச்சரிவுகளில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டன. இதனால் மலைகள் வெறும் மண் முகடுகளாக்கப்பட்டன. வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் தமக்க லாபத்தை பெற்றெடுப்பதற்காக எமது மலையகக் காடுகளை காட்டுமிராண்டித்தனமாக அழித்தனர். அண்மையில் விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இன்று

---

மலையக இயற்கை வளம் அழிக்கப் பட்டதன் வரலாறும் அதன் விளைவுகளும் பற்றிய விரிவான ஒரு கட்டுரையைத் தாயகம் விரைவில் வாசகர்களுக்குத் தரும்

ஆசிரியர் குழு

---

மலையகப் பகுதிகளில் ஒன்பது சதவீதமான காடுகளே எஞ்சியுள்ளன எனவும் அவற்றைப் பாதுகாக்க தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கூறியது. இக்காடுகள் இருந்திருந்தால் மண்சரிவுகள் ஏன் ஏற்படவேண்டும்? பெருமரங்களின் வேர்களும், சிறுமரங்களும் மலைச்

சரிவுகளில் உரிய இடங்களில் பாதுகாக்கப்பட்டிருந்தால் காலத்துக்குக் காலம் சாதாரண ஏழைத் தொழிலாளர் குடும்பங்களை பலி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது போயிருக்கும். மலையக மண்சரிவுகளினால் காலத்துக்கு காலம் கொல்லப்படுபவர்கள் தொழிலாளர்களே அன்றி எந்த ஒரு தோட்டத்துரையும் அல்ல என்பது கவனிக்கத் தக்கது. தோட்டச் சொந்தக்காரர்களும், துரைமார்களும் தமக்கு பாதுகாப்பாக மலை உச்சிகளில் பங்களாக்களை அமைத்துள்ளனர். அவர்களது பங்களாக்களைச் சுற்றி பெருமரங்கள் வளர்க்கப்படுவதை இன்றும் காணலாம்.

பொருளாதார ரீதியில் மிகவும் கொடூரமாகச் சுரண்டப்பட்டு அரசியல் ரீதியில் கேவலமாக அடக்கப்பட்டு வரும் லட்சக்கணக்கான தோட்டத்தொழிலாளர்களின் சோகம் நிரம்பிய அன்றாட வாழ்க்கையில் காலத்திற்கு காலம் ஏற்படும் மண்சரிவுகள் பேரிடிகளை உண்டாக்கி விடுகின்றன. ஆனால் இந்த அவல வாழ்வை மாற்றக்கூடிய அடிப்படை மாற்றத்தை நோக்கி இந்நாட்டு மக்களது போராட்டத்துடன் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து போராடி அந்நிய ஏகாதிபத்தியத்தையும், உள்நாட்டு பிற்போக்கு சக்திகளையும் முறியடித்து நாமே எமக்குத் தேவையான அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும். அத்தகைய அமைப்பிலேயே மண்சரிவுகளும் செயற்கையான அழிவுகளும் மட்டுமல்ல, இயற்கையான அழிவுகளைக் கூட மக்களால் கட்டுப்படுத்த முடியும். ஆனால் இன்று ஆட்சியின் கடிவாளக் கயிற்றை பிடித்திருப்போரில் ஒரு பகுதியினர் அந்நிய ஏகாதிபத்தியத்தை விரட்ட வேண்டும். இதை ஆட்சியினர் செய்வார்களா? எனக் கேட்பது மக்களை ஏமாற்ற முயற்சிக்கும் ஒரு மயக்கமான சொற்றொடரே அன்றி வேறொன்றுமில்லை. இன்று மலையக மக்களுக்கும், சகல மக்களுக்கும் தேவையானது. சொற்றொடர்கள் அல்ல, உறுதியான நடவடிக்கைகளேயாகும்.

---

## கடிதங்கள்

அண்மையில் மாதவெளியீடாக வெளியிடப்பட்ட தாயகம் இதழ்கள் மூன்றையும் பார்த்தேன். புத்தகம் வாசித்ததன் பயனாக பல உண்மைகளை அறிந்து கொண்டேன். தாயகம் தொடர்ந்து வெளிவரவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

வே. தவராசா

கல்முனை

தாயகம் கலை இலக்கிய மாத இதழ் மூன்றும் வாசித்தேன் மக்களுக்காக, மக்களைப் பற்றியே வெளிவரும் கதைகள், கட்டுரைகள் கவிதைகள் அடங்கிய தங்கள் இதழை நானும் என்னைப் போன்ற பலரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

செல்வி கி. சோமசுந்தரம்

பதுளை

உழைக்கும் மக்களை புரட்சிகர சிந்தனைவாதிகளாக, புரட்சிவாதிகளாக மாற்றுவதில் எழுத்து முனையின் பங்கு முக்கியமானதாகும். இப்பங்கைத் தாயகம் தடம்புரளாது ஆற்றும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இராஜலிங்கம்

வங்காலை

'யாழ்ப்பாணக் கவிராய' ரான கவிஞர் க. பசுபதி அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் கவிதைத் தொகுப்பிலிருந்து இக் கவிதையைப் பிரசுரிக்கின்றோம். [ஆசிரியர் குழு]

★ ★ ★

## வாழ்வுப் பிரச்சனை ஒன்றே

தமிழைப் படித்திடு தோழா — அதில்
அமிழ்தம் கிடைத்திடக் காண்பாய்
சிமிழில் அடைத்திட வேண்டாம் — அந்தச்
செல்வம் பொதுச் சொத்து ஆகும்

அன்னை மொழியை மதித்தல் — போல
அயலவர் மொழியை மதிப்போம்.
மன்னிய இப்புவி மேலே — நம்
மக்கள் சமமென்ப தாலே.

உன்னத மொழிபல உண்டே — அதில்
ஒன்று தமிழெனக் கண்டோம்
சன்னதம் கொண்டிட வேண்டாம் — மொழி
சார்ந்து வெறித்திட வேண்டாம்.

இனத்தின் பண்பினைக் காட்டு — வெறும்
இனத்து வேஷத்தினை ஓட்டு
சினத்தின் கொடுமை யினாலே — நம்
செம்மை மறைந்து போகும்.

வேற்று மொழிகள் பேசும் — மக்கள்
விந்தை புரிந்த தில்லையோ?
நேற்று வந்த மொழிகள் — உயர்
நீர்மை பெற்றதும் இல்லையோ?

பேசும் மொழிகொண்டு மக்கள் — வேறு
பிரிந்து வாழ்வது நன்றோ?
காசும் பொருளும் உடையோர் — ஒன்று
கலந்து வாழ்வ தறிவீர்.

கூழைக் குடிப்பதற் காக — தினம்
கூடிநின்றே உழைப் போர்கள்
நாளும் ஒருஇனம் தோழா — இது
நாட்டில் இருப்பதைக் காண்பாய்.

தேசம் மொழிபல ஆயினும் — அவர்
தேடிநிற் பதுநல் வாழ்வே.
வாழ்வுப் பிரச்சினை ஒன்றே — இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்!

# பாசிசம் என்றால் என்ன?

எஸ். சகாதேவன்

பெரும் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட முதலாளி வர்க்கத்தின் படு பிற்போக்குப் பகுதியினரின் அப்பழுக்கற்ற நேரடியான சர்வாதிகாரமே பாசிசம் எனப்படும்.

பொதுவாக வர்க்க முரண்பாடுகள் உச்ச கட்டத்தை அடையும்போது, அதாவது பாராளுமன்றம், தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, வேலை நிறுத்த உரிமை போன்ற முதலாளித்துவ ஜனநாயக ஏமாற்றுக்களின் மூலம் தொழிலாளி வர்க்கத்தையும், பொது மக்களையும் ஆளும் முதலாளி வர்க்கம் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாத நிலை ஏற்படும் போது ஒரு நாட்டில் பாசிசம் அதிகார பீடத்திற்கு வருகின்றது.

எந்த ஒரு நாட்டிலாவது இக் கட்டம் வந்து விட்டதென்றால் அது ஆளும் வர்க்கத்தினதும், தொழிலாளி வர்க்கத்தினதும் பலத்தையும் பலவீனத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. மறைத்து வைத்திருக்கும் துப்பாக்கிகள் மூலமான ஏமாற்று வித்தைகளினால் தொடர்ந்து ஆளமுடியாத நிலை ஆளும் வர்க்கத்தின் பலவீனத்தைக் காட்டுகின்றது. தொழிலாளி வர்க்கத்தை நசுக்கி ஒரு சர்வாதிகாரத்தை அவர்கள் மீது திணித்து விட்ட உண்மை ஆளும் வர்க்கத்தின் பலத்தைக் காட்டுகின்றது. மாறாக முதலாளித்துவ ஜனநாயகமென்னும் ஏமாற்றின் மூலம் தொடர்ந்து ஆளமுடியாத நிலைக்கு வந்த மட்டில் அது தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் நேச சக்திகளினதும் பலத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. ஆனால் முதலாளித்துவத்தை முறியடித்து உழைப்பாளிகளின் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முடியாத நிலை தொழிலாள வர்க்கத்தின பலவீனத்தை காட்டுகின்றது.

பாசிசம் தலை தூக்கி அதிகாரத்திற்கு வரும்போது அது முதலில் பழி வாங்குவது ஸ்தாபன ரீதியில் திரண்டுள்ள தொழிலாளி வர்க்கத்தையும், அதன் தொழிற்சங்கங்கள், வாலிபர் சங்கங்கள் கட்சியையுமேயாகும். ஏனெனில் பாசிச எதிர்ப்பின் முன்னணி சட்டிகளாகதிகழ்பவர்கள் தொழிலாளி வர்க்கமும் அதனோடு இணைந்த சினேகபூர்வமான சக்திகளுமாகும்.

சிறு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட முதலாளிகள் உட்பட சகல பிரிவினரையும் பாசிசம் ஒவ்வொன்றாக நசுக்குவதென்பது உண்மையே. ஆனால் முதன் முதலில் பாசிசம் தொழிலாளி வர்க்கத்திற்கெதிரான தனது தாக்குதலை நடாத்தும்போது இவ்வாபத்தை உரிய நேரத்தில் உணராது சிறு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட முதலாளிகள் அலட்சியமாக இருப்பர்.

எனவே பாசிசம் அதிகாரத்துக்கு வருவதை தடுக்க தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான ஒரு பரந்த பாசிச எதிர்ப்பு முன்னணி உருவாக்கப்படுவது ஒன்றே சிறந்த தந்திரோபாயமாகும். ஒரு புரட்சி மூலமும் வேலை நிறுத்த உரிமை போன்ற நியாயபூர்வமான ஜனநாயக உரிமைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலமுமே அவ்வித ஐக்கிய முன்னணி அதிகாரத்துக்கு வரமுடியும். மக்களை அடக்குவதன் மூலமும் வேலைநிறுத்த உரிமையை தொழிலாளி வர்க்கத்திற்கு வழங்க மறுப்பதன் மூலமும் அவர்கள் பாசிசத்திற்கெதிரான போராட்டத்தை மேற் கொள்வரென்று எதிர் பார்க்க முடியாது.

இரண்டாம் உலகப்போர் ஆரம்பத்தில் ஜேர்மனியில் இருந்த கிட்லரின் பாசிசம், இத்தாலியில் இருந்த முசோலினியின் பாசிசம், ஜப்பானிய பாசிசம் ஆகியவையே ஆரம்பகால பாசிசத்தின் உருவங்களாகும். ஜேர்மன் முதலாளித்துவம் முதலாம் உலகப் போரில் அடைந்த தோல்வியும் இழந்த நாடுகளும் அதன் காரணமாக அபாரிமிதமான இலாபத்தை பெறத்தவறி தங்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியை கைலஞ்சம் கொடுத்து வாங்க முடியாமையுமே ஜேர்மன் முதலாளிகள் பாசிசத்தை நாடியதற்கு ஒரு காரணமென்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே ஒரு கிட்லரை உருவாக்கி அவனுக்கு பண உதவி கொடுத்து ஆயுதங்கள் கொடுத்து அடக்குமுறை மூலம் தமது தொழிலாளி வர்க்கத்தை நசுக்க வேண்டிய அவசியம் ஜேர்மன் முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டது. இக் கைங்கரியங்களை எதிர் பார்த்தது போல கிட்லர் செய்து முடித்தான்.

கிட்லரின் பாசிசம் சோவியத் யூனியனை நசுக்கும் கம்யூனிச எதிர்ப்பு கொள்கையையும், தேசிய மிகை அபிமானத்தையும் அடிப்படையாக கொண்டது. இதன் விளைவாக யூத இனம் ஒழித்துக்கட்டப்பட்டது. வேலை இல்லாத மக்களுக்கு சீருடை அணிவித்த ஆயுத உற்பத்தி ஆலைகளுக்கு கிட்லர் அனுப்பினான். இதன் விளைவாக உலகப்போர் தவிர்க்க முடியாத ஒன்றாகியது

ஓர் உலகப்போர் மூலம் கோடிக்கணக்கான உயிர்களை பலியிட்டே கிட்லரின் பாசிசத்தை முறியடிக்க முடிந்தது. இன்று பாசிசம் வெவ்வேறு உருவங்களில் இந்தோனேசியா, கிரேக்கம், சிலி உட்பட அசிய நாடுகளில் தலைதூக்கியுள்ளதை காணுகிறோம். இப்பாசிச ஆட்சிகளுக்கு பக்கபலமாக பிற்போக்குத் தனமான ஏகாதிபத்திய வல்லரசாகிய ஐக்கிய அமெரிக்கா நிற்பதையும் காணலாம்,

இவ்வித உண்மைகளிலிருந்து படிக்க வேண்டிய பாடம் எதுவெனில் எந்த நாட்டிலாவது பிற்போக்கு சக்திகளும் புரட்சிகர சக்திகளும் சமபலத்தை அடைந்த ஒரு கட்டத்தில் புரட்சிகர சக்திகள் பலாத்காரமூலம் பிற்போக்கு சக்திகளை ஒழித்துக் கட்டாவிட்டால் பிற்போக்கு சக்திகள் புரட்சிகர சக்திகளை வேரோடு சாய்த்து பாசிச சர்வாதிகாரத்தை உருவாக்கியே தீர்வார்கள்.

★ ★ ★

சிறுகதை

# நீண்ட இரவுக்குப் பின்......

— நந்தினி

அந்தப் பரீட்சை நடக்குமிடத்தைக் கண்டுபிடிக்க அரசரத்தினமும், குலமும் மிகவும் கஷ்டப்பட்டு விட்டார்கள்.

'குலம்' கொழும்பு வாசியாகி மூன்று வருடங்களாகி விட்டாலும் தலைப்பட்டினத்தின் சந்து பொந்துகளைத் தரிசிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை.

காலையில் அவசர அவசரமாகக் காரியாலயத்திற்குப் புறப்பட்டு மாலையில் 'றாம்' என்று சொல்லுகின்ற புறக்கோட்டையின் தையல்கடைப் 'புறாக்கூண்டு' மேல் தட்டுக்கு ஏணியேறி வரும் வரை அவனுக்கு அவசர அலுவல்கள் அனைத்தும்.

யாழ்ப்பாணத்திலிருந்து மருந்துக்குச் சிட்டை அனுப்பும் ஆயுள்வேத வைத்தியரான மாமாவுக்காக கடைகளை அலைவதும், புத்தகத்திற்காக எழுதும் சிறிய தகப்பனாரின் மகனுக்காக 'அற்லஸ் கோல்' முதலிய புத்தகக் கடைகளைத் தேடித் திரிவதும் இடையிடையே கோலூரைத் தேடிவரும் உறவினர் நண்பர்களை அழைத்துச் செல்வதும் புற்றுநோய் ஆஸ்பத்திரி நேர்முகப் பரீட்சை என்றுவரும் வேண்டியவர்களுக்காக புகையிரத நிலையத்தில் 'தவங்'கிடப்பது முதல் கொண்டு மிருகக் காட்சிச்சாலை நூதனசாலை, மவுண்லவேனியா இத்தியாதிகள் ஈறாக அவர்களை ஊர் அனுப்பும் வரை எவ்வளவோ சிரமதானங்கள்.

குலம் மிகவும் பொறுமைசாலி இல்லாதுவிட்டால் நெருக்கியழுத்தும் பொருளாதாரப் பிடிக்குள் சிக்கி மரவள்ளிக் கிழங்கோடும் மத்தியமான சாப்பாடுமாக மல்லாடும் இந்த நிலையை உதறித் தள்ளிவிட்டு ஊருக்குத் திரும்பியிருப்பான்.

கொழும்பில் வேலை செய்கின்ற சராசரி அலுவலகத்தொழிலாளிகளின் கஷ்டங்களை அவனும் மிகவும் வன்மையோடு ஏற்றுக் கொண்டிருந்தான்.

ஒரு சிலர் நினைப்பதுபோல் கொழும்பில் அவர்கள் உல்லாச வாழ்க்கை வாழவில்லை' என்பதை இந்த மூன்று வருட

வாழ்க்கையின் மிகவும் உறுத்தலான அனுபவம் அவனுக்குக் காட்டிவிட்டுருந்தது.

யாழ்ப்பாணம் வரும்போது போலியான ஒரு கம்பீரத்துடன் மிடுக்காக பலர் வருவது போல் அவனுல் வர முடியவில்லை.

வெளிப்படையாகவே தனக்குள்ள கஷ்டங்களை அவன் கூறி விடுவான். இருந்தும் அனேகர் அதைப் புரிந்து கொள்வதில்லை.

அரசரத்தினம்கூட அவனின் இந்த நிலையை ஒரு காலத்தில் நம்பத் தயாரில்லாமல் தானிருந்தான்.

கொழும்பில் ஏதோ ஒரு ராஜ போக வாழ்க்கையில் அவன் திளைப்பதாகவும் தனக்கும் அந்த நிலை வரவேண்டுமென்றும் அவன் மிகவும் விரும்பியிருந்தான்.

குலத்திற்கு எழுதும் கடிதங்களில் அரசரத்தினத்தின் அபிலாஷைகள் தொனிப்பதைக் குலம் பலமுறை அவதானித்திருக்கிறான்.

அரசரத்தினத்தின் அந்த 'அபிலாஷைகள்' குலத்திற்கு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தும்.

எத்தனையோ முறை அவன் சூசகமாகவும் வெளிப்படையாகவும் எழுதியும் ஊருக்கு வரும்போது நேர்முகமாக எடுத்துக் கூறியும் அரசரத்தினத்தின அந்த நிலையை மாற்ற முடியவில்லை.

வரதன் கூறியதுபோல் அரசரத்தினம் படித்த பலருக்கிருக்கும் அந்தப் பலவீனத்திற்கு ஆட்பட்டிருக்கிறான். அது விரைவில் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை குலத்திற்கும் இருந்தது.

முதல் நாள் மாலை அவன் காரியாலயத்தை விட்டு வந்தபோது...

'அதிகாலை ரயில்வே ஸ்டேசனில் சந்திக்கவும்' என்ற தந்தி அவனுக்காகக் காத்திருந்தது.

முன்பே அரசு ஏதோ ஒரு நேர்முகப் பரீட்சைக்கு வருவதாகக் கடிதமெழுதிய ஞாபகம் அவனுக்கு வந்தது.

குலத்திற்கு மிகவும் அனுதாபம் பிறந்தது. இன்றைய நிலையில் கொழும்பு வந்து திரும்புவதென்றால் ஏற்படும் பணச் செலவுக்கு "அரசு படப்போகும் பாடு அவனுக்கு மானசிகமாக விளங்கியது."

ரயில்வே ஸ்டேசனில் அரசுவைச் சந்தித்தபோது அரசுவே அதைப்பற்றி மனந்திறந்து சொன்னான்...

"மச்சான் சத்தியமாயெடா அம்மாவும் அக்காவும் எனக்குச் சிலவுக்குக் காசு தாறதுக்குப் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல நேற்றுத் தான்ரா இந்தக் கடிதம் கிடைச்சுது காலமை பாணு

க்தக் காசில்லாமல் பட்டினி யோடை கிடைக்கையுக்கை இந் தக் கடிதம் வந்தது. மத்தியா னப் பாட்டுக்கு என்ன வேனும் செய்யவேணுமென்கிற யோசினை யிலயிருக்க மூழுசாய்ஐம்பதுரூபா வேணுமெண்டால் மச்சான்... போடுறதுக்குலோங்சுகூட இல்லை யெடா. அம்பிகை பாகனிட் டைப் போய்க் கெஞ்சி மண்டா டித் தான்ரா ஒரு லோங்சும் சேட்டும் வாங்கின்னன். மாத் திறநுக்கு வேறை சேட்டில்லை, போட்டிருக்கிற சேட்டும் பின்பக் கம் வெடிச்சுப்போய்க் கிடந்தது தைச்சுப் போட்டுக் கொண்டு வந்தனான்...

ஒரு சேட்டுப் பெட்டியும் கையுமாக சிவந்து நின்ற கண்க ளோடு புகையிரத நிலையத்தில் நின்ற அரசுவை மிகுந்த கனி வோடு நோக்கினான் குவம்.

அந்த அதிகாலை நேரம் யாழ்ப்பாணத்தின் — இலங்கை யின் ஒரு சராசரி மனிதனைச் சந் தித்த உணர்வு குலந்திற்கு எழுந் தது.

ரூமுக்குச் சென்று குளித்து உடைகளை மாட்டிக் கொண்டு புறப்படுவதற்கிடையில் அரசு எவ்வளவோ கதைகளைக் கூறிவிட் டான்.

“மச்சான் எனக்கு ரெக்னிக் கல் கொலிச் ஸ்ரஃனா சேட்டி பிக்கற் இருக்குது. வகுப்பிலையும் நான்தான் கெட்டிக்காரன். உனக்குத் தெரியுந்தானே இந்த வேலைக்குப் போட்டதுக்குப்பிறகு ஒரு டியூட்டரியிலை பிறக்ரீசுக்குப் போய் வந்தனான் போன மாதந் தான் காசு இரண்டு மாதத் தான் குடுக்கேல்லையெண்டு அந் தாள் வரவேண்டாமென்று சொல்லிப் போட்டுது. எண்டா லும் என்னுலை ரெஸ்ரை நல்லா ய்ச் செய்ய முடியு மெண்ணிற நம்பிக்கையிருக்கு. நான் எடுபடு வன் நீ நம்பு.. ஆரேனும் என் னோடை படிச்சவங்கள்தான் வரு வங்கள் மிஸ் வல்லிபுரம் கொடி யாமத்திலை நிண்டு ஏறினவ... அவ என்னைவிட ஸ்பீற் குறைவு தான் ஆர் உங்கை வரப்போகி னம்.. ஆரேனும் சிங்களப்பொடி யள் வந்தால் அவங்களுக்கு சில வேளை கிடைச்சாலும் கிடைக் கும்...”.

நம்பிக்கையோடு அவன் முன கியவைகளை குலம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

தன்னுடைய உண்மையான உறுதியான வார்த்தைகள் அரசு வின் அவிச்சமலர் இதயத்தை..., அதனில் தேங்கி நிற்கும் பசுமை யான எண்ணங்களைக் கசக்கி எறிந்துவிடக் கூடாதென்று அவன் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டான்.

“இந்த வேலை மட்டும் எனக் குக் கிடைச்சால். அம்மாவை யும் அக்காவையும் என்ரை இர ண்டு தம்பியையும் என்னுலை காப்பாத்த முடியும்...”

இந்த வார்த்தைகளை அரசு மிக மிக நம்பிக்கையோடு முன கினான்...

குலத்துக்கு உள்ளூரச் சிரிப்பாகவிருந்தது...

அவன் கூட இப்படித்தான் நினைத்திருந்தான்...

சுருட்டோடும் சுருட்டுக் கொட்டிலோடும் மல்லாடும் தன் தகப்பனரை ஓய்வெடுக்க வைக்க வேண்டுமென்று அவன் மிகவும் விரும்பினன். வால்ச் சுருட்டுக் கட்டும் பையனுக இருந்து அதே நேரத்தில் படிப்பிலும் கவனமாக இருந்து ஏதோ ஒரு அதிர்ஷ்ட வசமாக கொழும்பில் ஒரு கந்தோரில் உத்தியோகமாகும் வரை அவனிடமும் அந்த நம்பிக்கை இளமையாகவே இருந்தது. இன்று அந்த நம்பிக்கை அவனிடமிருந்து வெகு தொலைவு விலகி மடிந்து போய் விட்டது.

கணபதியர் இன்றும் சுருட்டுக் கொட்டிலில் மல்லாடும் மசிய நிறமான காட்சி அவன் கண்ணில் நிழலாடியது.

அழுக்குப் படிந்த பாவாடையுடன் அடுப்புக் கருகில் குந்தியிருந்து கஞ்சி காச்சும் அவன் சகோதரி புனிதத்தின் காட்சியும் புலனுகியது...

இந்த நாட்டின் அடித்தளத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையின் வீட்டிலும் அன்ருடம் நிகழும் காட்சிகளின் பிரதியீடுகள்தான் தன் வீட்டிலும் நிகழுகிறது என்பதை அவன் உணர்வான்.

அவனது நண்பன் வரதன் கம்மாலையின் அனல் வெளிச்சத்தில் சுத்தியலை உயர்த்தி ஓங்கிப் பழுக்கக்காச்சிய இரும்பில் அடிக்கும் காட்சி அவனுள் விரிந்தது.

"குலம் இந்த நிலைமையள் எலக்சனலையோ மாறிமாறி அரசுகள் வாறதாலையோ மாருது... இந்த நிலைமையளைக் கட்டிக்காத்து நிக்கிற அரசு அமைப்பை உடைத்து அதிலை எங்களைப்

## விசுவரூபம்

நாங்கள் 'விசுவரூபிகள்'
எங்களின்
இதயத்துள் குமுறும்
எரிமலையை—
எழுந்து அடங்கும்
அலைகடலை...
அடிவயிற்றில்..
கொதித்து கனலும்
அக்கினியின் ரௌத்திரத்தை...
உலகத்தை இயக்கும்
எம்—
உடலுழைப்பின் மகத்துவத்தை
நீங்கள் நினைத்துப் பாாத்திர்க
நெடிதுயர்ந்து [ளாயின்
வெளிநிரப்பி... நிற்கும்
எங்களின்
'விசுவரூப' தரிசனம்
அப்போது
உங்களுக்குத் தெரியும்!

—ராதேயன்

போலே உழைக்கிற மக்களின்ரை அரசைப் போராடி அமர்த்தாத வரையிலை இது தீராது... இதுக்கு உதவக்கூடிய எங்கடை ஒரேஒரு

தொழிலாள வர்க்கக் கட்சியிலே நாங்களும் இணைந்து எங்களோடை இணைபச்கூடிய நல்லெண்ணங்கொண்ட ஆக்களையும் இணைக்கிறவேலையைச் செய்து அந்தப் பொன்னான வேளையை விரைவிலே வரச் செய்யாமல் சும்மா இருப்பது மடைத்தனம் விரக்தியடைந்துபோய் எல்லாத்தையும் கைவிடாமல் உறுதியாய் இருந்து கொள்''

வரதனின் குரல் குலத்தின் காதில் அதிர்ந்து வந்தது.

அவனுக்கும் அந்த உண்மையில் அசைக்க முடியாத நம்பிக்கையிருந்தது,

அவன் அலுவலக நண்பர்கள் பலரோடு அளவளாவிய போது அநேகமானவர்கள் அவனோடு முரண்படாதிருந்ததைக் கண்டான்.

வரதனைப்போன்றே அவனது அலுவலக நண்பன் 'விமலரத்தின'வும் இவனோடு பல விஷயங்களில் உடன்பட்டிருந்தான்.

காலையில் ரயில்வே ஸ்டேசனில் இருந்து திரும்பும் வழியில் 'விமலே' எதேச்சையாகச் சந்தித்தபோது 'அரசு'வை அவனுக்கு அறிமுகம் செய்தான் குலம்.

விமல் மிகுந்த அனுதாபத்தோடு அரசுவைப் பார்த்தான்.

''உமது முயற்சி வெற்றியளிப்பதாக...'' என்று ஆங்கிலத்தில் கூறும்போது அவன் மிகவும் இங்கிதமாகவே நடந்து கொண்டான்.

சிங்களத்தில் குலத்தோடு கதைக்கும்போது இதே பரீட்சைக்கு தனது உறவினர் ஒருவரும் வந்திருப்பதாகவும் பரீட்சை நடக்குமிடத்தில் மீண்டும் சந்திப்பதாகவும் கூறி அவன் விடை பெற்றுக் கொண்டான்.

'லெஸ்லி கார்டின்ஸ்' என்னும் அந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கிடையில் மப்பும் மந்தாரமுமாய் இருந்த வானம் மழையாகக் கொட்டத் தொடங்கி விட்டது.

மழைக்காக ஒரு வீட்டின் முன்பக்க பிளாற்றின் கீழ் ஒதுங்கி நின்றபோது...

அரசுவிடம் வரதனைப்பற்றி விசாரித்தான் குலம்.

''உன்னை விசாரிக்கச் சொல்லிச் சொன்னான். எனக்கு வேலை கிடைச்சால் தனக்கும் சந்தோஷமாம் எனக்கு வேலை கிடைச்சாப் போலை பிரச்சினை எல்லாந் தீர்ந்திட மாட்டுதாம்...''

வரதன் என்ன அர்த்தத்தில் அதனைக் கூறியிருப்பான் என்பது குலத்திற்குப் புரிந்தது. அரசுவுக்குக் கூட அது புரிந்துதான் இருக்கும், அவன் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை...

'லெஸ்லி கார்டின்ஸ்'சில் உள்ள அந்த நூலக சேவைகள்

சபைக் காரியாலயத்திற்கு அவர்கள் மிகுந்த அலைவுக்குப் பிறகு எட்டு மணிபோல் போய்ச் சேர்ந்தார்கள்.

முன்புறம் குரோட்டன் செடிகள், மண்டிப் போய்க் கிடந்த ஒரு சிறிய 'மாடி வீடு' தான் அந்த அலுவலகம்.

அவர்களுக்கு முன்பதாக ஒரு ஐந்தாறுபேர் அங்கு வந்து விட்டிருந்தார்கள், அதில் மூன்றுபேர் பெண்கள்.

முன்புறம் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அவர்களோடு அரசுவும் குலமும் அமர்ந்து கொண்டார்கள்.

நேரம் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் வரத் தொடங்கிவிட்டார்கள்... ரக்சியிலும் காரிலுமாக பெண்களும் ஆண்களும் சுமார் நாற்பது ஐம்பது பேர்களுக்கு மேல் சேர்ந்து விட்டார்கள்.

ஆங்கிலத் தட்டச்சாளர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான அந்தப் பரீட்சைக்குக் கட்டத் தட்ட இலங்கையின் சகல பாகங்களிலிருந்து முப்பது சிங்களவர்களும் இருபது தமிழர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

முதலில் பகுதி பகுதியாக வேகப் பரீட்சை நடைபெற்றது.

அரசு மிகத் திறமையாகவே பரீட்சையைச் செய்தான்.

மேல் மாடியில் நடந்த அந்தப்பரீட்சைக்கு அவனோடு மூன்று பெண்களும் ஒரு ஆணும் முதல் பகுதிக்கு அனுமதித்தார்கள். பெண்களைவிட அந்த ஆண் மிகவும் வேகம் குறைவாகச் செய்ததை அரசு அவதானித்தான்.

உள்ளே ஒருவித சந்தோஷம் ஏற்பட்டபோதும் அந்தப் பையன்மீது அவனுக்கு பச்சாத்தாபம் ஏற்படவே செய்தது.

பரஸ்பரம் இருவரும் கதைக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்த போது அந்தச் சிங்களப் பையன் ஆங்கிலத்தில் அரசுவைப்பாராட்டினான்.

''உம்மடை திறமையைப் பாராட்டுகிறேன். உமக்கு இந்த வேலை கிடைக்க எனது வாழ்த்துக்கள்...''

தனது பலகீனத்தை ஒத்துக் கொண்டு மனந்திறந்து தன்னைப் பாராட்டிய அந்த சிங்கள வாலிபன்மீது அரசுவுக்கு ஒரு மரியாதை பிறந்தது.

'ரத்னபால' என்கின்ற அந்தப் பையனோடு மிகவும் நெருக்கமாகக் கதைக்கக்கூடிய சந்தர்ப்பமும் அவனுக்குக் கிடைத்தது.

வேகப் பரீட்சை முடிந்ததும் நேர்முகப் பரீட்சை மதியம் இரண்டுக்கு ஆரம்பமாகுமென்று அறிவித்தார்கள்.

சாப்பிடுவதற்காக 'ரத்னபாலா'வும் இவர்கள் நுழைந்த ஹோட்டலுக்கே வந்திருந்தான்.

குலம் அந்தப் பையனோடு மிகவும் சரளமாகப் பேசினான். குருநாகலைச் சேர்ந்த ஒரு வறிய விவசாயியின் மகன் தானென்று அவன் கூறினான்.

மிகவும் அன்னியோன்னியமாகக் கதைக்கத் தொடங்கிய போது அவன் பல விடயங்களைப் பற்றியும் பேசினான்.

உண்மையில் எங்களைப் போன்ற வறிய மக்கள் சிங்களவரென்றாலும்... தமிழரென்றாலும் ஒரேவித கஷ்டத்தைத்தான் அனுபவிக்கிறார்கள். பணமுள்ளவன் எந்த இனத்தவனென்றாலும் எந்த அரசு வந்தபோதும் பாதிக்கப்படுகிறதில்லை...''

**பெருமலையை**
**நாம் சரிப்போம்**

மலையகத்தில் மண்சரித்து
மக்கள் பலர் இறந்தனராம்
இயற்கை என்று
இயம்புகின்றார்
உண்மை அதை
மறைப்பதற்கு
கொள்ளைக்கார வெள்ளையர்கள்
கூலிகளாய்க் கூட்டிவந்து
மலைச்சரிவில் குடியமர்த்தி
மலைமுகட்டுக் காட்டை வெட்டி
சரித்து விட்டார் மண்ணை
எம்போல் ஏழைகளின் வாழ்வி
[லிலே
ஏகாதிபத்தியத்தின் பிடிப்பு
இங்கே உள்ளவரை
இதுபோன்ற பெருந்துயர்கள்
எம்மைவிட்டுப் போகாது
எழுந்திடுவீர் அந்தப்
பெருமலையை நாம் சரிப்போம்
எம்தலையில் வீழுகின்ற
மண்சரிவை நாம் தடுப்போம்

—தணிகையான்

ரத்தினபாலாவின் பேச்சு குலத்துக்கு மிகவும் பிடித்தமாயிருந்தது. 'நீங்கள் எங்கு வந்து தங்கியிருக்கிறீர்கள்?' என்று விசாரித்தபோதுதான் விமல் குறிப்பிட்ட நபர் ரத்தினபால என்பது தெளிவாகியது.

விமலோடுதான் தான் வேலை செய்வதாக குலம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''உண்மையில் எனக்கு இந்த வேலை கிடைக்கமாட்டுது என்று எனக்குத் தெரியும்.. என்னுடைய தகப்பனாரின் நிர்ப்பந்தத்திற்காகத்தான் இங்கு வந்தேன். வழமையான தகப்பன்மாருக்கிருக்கிற ஆசைதான் என்னுடைய தகப்பனாரையும் பிடித்துக்கொண்டிருக்கிறது. அது இந்தமுறையோடு தீர்ந்திடும். இனி நான் வயலில் வேலைசெய்கிறதை அவர் மிகவும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுவார்'' இதோடை நான் பத்துக்குக் கூடின பரீட்சைக்கு வந்து போயிட்டன். இதுதான் கடைசி என்று சொல்லிவிட்டுத் தான் வந்தேன். வயலிலை வேலை செய்யிறதாலை, அந்த மக்களோடு பழகவும் அவர்களோடு ஐக்கியப் பட்டு வேலை செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கும், அதை நான் மிகவும் விரும்புகிறேன் என்று மிகவும் மகிழ்ச்சியோடு அவன் முணுமுணுத்தான்.

புதிய மகிழ்ச்சியின் முத்திரை அவன் முகத்தில் பிரதிபலித்தது.

குலம் அரசுவை அர்த்த புஷ்டியோடு நோக்கினான்.

அரசு தலையை மெதுவாகத் தாழ்த்திக் கொண்டான்.

மதியம் நேர்முகப் பரீட்சை நடந்தது.

அரசுவை அவர்கள் கேட்ட கேள்விகள் அரசுவுக்கிருந்த நம்பிக்கைகள் எல்லாவற்றையும் சிதறடித்துவிட்டன.

'முன் அனுபவம்' இருக்கிறதா என்கின்ற கேள்வியில் புதைந்து கிடந்த அர்த்தம் வேறொரு காரியாலயத்தில் வேலையாளாக இருந்த ஒருவருக்கு வேலையைப் பொறுப்பேற்கும்படி னககளில் கடிதம் கொடுத்து விட்டபோதுதான் புரிந்தது.

திரைமறைவில் என்ன நடந்ததோ; தமிழரான அந்த நபர் எதுவும் சொல்லாததால் ஒருவருக்கும் புரியவில்லை.

குலம்.. ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

அரசுவுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

வீட்டில் அவன் அன்னையும் அக்காவும் தனக்காக வாங்கிய ஐம்பது ரூபாவுக்காக நார்ப் பெட்டியோடு போராட இருப்பது அவனின் மனக் கண்ணில் விரிய...

கண்கள் பொலுபொலுத்தன.

குலம் அவனை மிகவும் தேற்றினன். "மச்சான் உதுக்காக வருத்தப்படாதை"

"இல்லைக் குலம் நான் வெறும் முட்டாளெடா. இந்த ஐம்பது ரூபாவை எப்பிடியெடா அடைக்கிறது? நான் இனி மேசன் வேலைக்கெண்டாலும் போகத்தான் போறன்" இனியும் சும்மா வரட்டுத்தனமாய் இருக்கேலாது..."

குலம் மிகுந்த சந்தோஷத்தோடு அரசுவின் கைகளைப் பற்றினன்.

"மச்சான் பாத்தியே ரத்தினபாலாவைப் போலையும் உன்னைப் போலையும் எத்தினை தமிழ் சிங்களச் சிலவகள் கஷ்டப்பட்டு இங்கை வந்ததோ தெரியாது. நாங்கள் கதைச்சதாலை எங்களுக்குப் பிரச்சினை விளங்கிச்சுது... மற்றது கள்?

"குலம் உத்தியோகம் கிடைக்காது என்கிறதாலை மட்டும் நான் இந்த முடிவுக்கு வரயில்லை நீங்கள் படுகிற கஷ்டத்தைப் பார்த்த பிறகும் இந்த நாட்டிலை இருக்கிற பிரச்சனையைத் தீர்க்கிறதுக்கு நீங்கள் சொல்லிற மார்க்கந்தான் சரி எண்டு எனக்கு விளங்கியிட்டுது. நானும் வரதனோடை சேர்ந்து உழைக்க வேணும இண்டைய நிலையிலை அது கூடக் கிடைக்குமோ தெரியாது. 'ரத்தினபாலா' போல நானும் விடிவுக்கான மார்க்கத்தைக் காண உழைக்கப் போகிறேன். அந்த நிலைவந்தால்தான் விடிவும்... இந்த நிலைக்கு முடிவும் வரும். என்னை நம்பு. நான் திருந்தியிட்டன்.

புகையிரத நிலையத்தில் அரசுவை மெயில் வண்டியில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பும்போது குலத்திற்கு என்றுமில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

நீண்ட இரவு கழிந்து அதிகாலை வேளையில் அந்த வண்டி சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் தரித்த போது ஒரு புது மனிதனாகவே கீழே இறங்கினன் அரசு. ★

கவிதை

# புதுவழி காணவில்லை

—செம்மீன்

வெள்ளைநல் வேட்டி கட்டி
விருதுகள் மார்பில் சாத்தி
உள்ளத்து விடமே யூற
ஒளிவிடு பல்லுக் காட்டி
கள்ளமே யில்லாப் பண்புக்
கவசமே யணிந்தார் போல
அள்ளிடும் நீறு பூசி
அங்கதத் தையா சொல்வார்.

தொழில்தர வேண்டு மானல்
தொகைப்பணம் தேவையில்லை
எழில்தரு வனிதை மாரை
ஏற்றியே கொழும் பனுப்பி
இழவெடுப் பான்க ளுக்கு
இரையெனத் தந்தால் போதும்
மழமழ வென்று வேண்டும்
மனத்துள தொழிலும் சேரும்.

ஏமாந்த வாலி பர்க்கு
இவர்தரு விடையி தாகும்
காமாந்த காரருக்கு
கன்னிகா தானஞ் செய்து
சீமானு மங்க தந்தார்
செப்படி வித்தை காட்டி
ஆமாப்போட் டளித்த பின்னல்
அறுசுவை விருந்துங் கேட்பார்.

மந்திரி இரவு வந்தால்
மாடாடு கோழி இறைச்சி
தந்திர மாக நல்ல
தரமுறு மதுவுமீந்தால்
எந்திர மாக உங்கள்
இதயமே தேடு மந்தச்
சிந்தைசேர் தொழிலும் வீடு
சேர்ந்திடும் நம்பு மென்பார்.

சுற்றிலே ஏமாற் றந்தான்
இதயத்தி லிடியு மேதான்
சோற்றினுக் குழைத்து வாடிச்
சொல்லொணுப் பாடு பட்டோர்
வீற்றிருந் திறுமாப் பெய்தும்
வீணனங் கதத்தான் தன்னைப்
போற்றியே புகழ்ந்த தல்லாற்
புதுவழி காண வில்லை.

# ''மண்ணிலிருந்து விண்ணுக்கு''

— த. சத்தியகுமார்

வைத்திய கலாநிதி க. இந்திரகுமார் எழுதியுள்ள ''மண்ணிலிருந்து விண்ணுக்கு'' என்னும் வீரகேசரிப் பிரசுரம் ஒரு விஞ்ஞான நூலாக மட்டும் அமைந்திருந்தால் அதைப்பற்றி இங்கே விமர்சனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் இந்நூலில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கும் வானியலோடு சம்பந்தமற்ற கருத்துக்கள் சர்ச்சைக்குரியன. மேலும் ஏனைய அறிவியற் துறைகளைச் சார்ந்த நூல்களைப் போலல்லாது ஆராய்ச்சியின் மூலம் இன்று நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அறிவியல் உண்மைகளைத் தொகுத்துக் கூறுது அமெரிக்காவும் ருஷ்யாவும் விண்வெளி ஆராய்ச்சியில் எவ்வாறு மாறி மாறிப் போட்டியிட்டன என்பதையே எடுத்துக் கூறுகிறது. இந்நூலின் ஒரு சில அத்தியாயங்களைத் தவிர ஏனையவை யாவும் இந்த அமெரிக்க—ருஷ்யப் போட்டியின் வர்ணனையாகவே உள்ளன. இது விஞ்ஞான நூலுக்கு ஒவ்வாததும் தேவையற்றதும் ஆகும். இதில் நூலாசிரியரின் சார்பு முழுக்க முழுக்க ருஷ்யாவின் பக்கமே உள்ளது'

இது விஞ்ஞானமும் விஞ்ஞான ஆராய்ச்சியும் அரசியலுக்கு அப்பாற்பட்டது என்று அறிவியல் நூலாசிரியர் ஒருவர் அரசியல் பற்றிக் கூறுவது 'அத்துமீறிப்' பிரவேசிப்பதாகும் என்று கூறுவதாகப் பொருள்படாது. ஆனால் இங்கு (அம்புலிப் பயணங்களின் அரசியல் பின்னணிகள் என்ற அத்தியாயத்தில் கூட) அரசியல் பற்றி ஏதொன்றும் கூறப்படவில்லை. மாறாக வல்லரசுகளிடையே உள்ள போட்டியே விவரிக்கப்படுகிறது'. உண்மையான அரசியலுக்கும் இருமேலாதிக்க வல்லரசுகளுக்குமிடையே காணப்படும் போட்டிக்கும் (இப்போட்டி விண்வெளிப் பயணத்தில் மட்டுமல்லாது இராணுவ விஸ்தரிப்பு, அணு ஆயுத விஸ்தரிப்பு போன்ற பல துறைகளிலும் காணலாம்)

இடையே ஆசிரியரால் வித்தியாசம் காண முடியாமல் இருப்பது ஆசிரியரது அரசியலறிவின் தரக் குறைவையே காட்டுகிறது. நிற்க

இந் நூலை வாசிக்கும்போது ருஷ்ய புத்தகம் ஒன்றை வாசிக்கும் உணர்வே ஏற்படுகிறது. அட்டைப் படமும் கூட இதற்கு ஏற்றவாறே அமைந்திருக்கிறது. தொடர்ச்சியாக 'சோவியத்நாடு போன்ற ருஷ்யப் பிரச்சார சஞ்சிகைகளை வாசிப்பவர்களுக்கு இந் திரதமார் தமது புத்தகத்தில் கூறியிருப்பவை புதியவையாக தென்படுவதற்கு நியாயம் இல்லை' ஆனல் மொழி பெயர்ப்பு பாராட்டப்பட வேண்டிய தொன்று தான்.

---

**வரலாற்றின் பாடங்கள்**

விலங்குகளின் சுமையுடன்
சுழலும் உலகமே
உனது—
இதயக்கருவில்
உன் அடிமை விலங்கொடிக்க
மிக்க வேகமாக வளரும்
புதுயுக, சிசுவை
இன்னற் படாமல்
இரத்தம் எதுவும் சிந்தாமல்
இலேசாக......
சமாதானமாக......
பெற்றுவிட முடியும்
என்ற—
பேதைகளின் கூற்று
அதோ......
பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது
—ஷெல்லிதாசன்

---

உருவத்தில் மட்டுமல்லாமல் அதில் கூறப்பட்டுள்ள கருத்துகளும் இதுவரை சோவியத் யூனியனின் உத்தியோக பூர்வமான வட்டாரங்களால் திரும்பத் திரும்ப கூறப்பட்டவையே. உதாரணமாக ஆரம்பகால அமெரிக்க செய்மதிகள் எடை குறைந்தவைகளாகவும் (''முந்திரிப் பழங்களாய்'') சோவியத் செய்மதிகள் பாரம் கூடியனவையாகவும் (''இராட்சதப் பழங்களாயும்'') அமைந்தமைக்கு சோவியத் ரொக்கட்டுகள் அதிக பாரம் தூக்கும் சக்தி கொண்டிருந்தமையே காரணம் என ஆசிரியர் கூறுகிறார். அமெரிக்க செய்மதிகளுக்கு இத்திறன் இருக்கவில்லை என்பது அவர் வாதம். ஆனல் உண்மையில் சிறிய செய்மதிகளுக்குத் தேவையான நுணுக்கமான கருவிகளை படைக்கும் தொழில் நுணுக்கமும் ஆற்றலும் ருஷ்ய விஞ்ஞானிகளுக்கு இருக்கவில்லை என்ற உண்மையை ஆசிரியர் மறைக்கப்பார்க்கிறார். அம்புலி ஆராய்ச்சியில் ருஷ்யா விண்கலங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தது என்றும் மனிதனை அம்புலிக்கு அனுப்புவதை பிரதானப்படுத்தவில்லை என்றும் ஆசிரியர் கூறுகின்றார். மக்களைக் கவர்வதை நோக்கமாகக் கொள்ளாது ருஷ்யா விஞ்ஞான ஆய்வு புரிவதையே தனது குறிக்கோளாகக் கொண்டது என்று ஆசிரியர் எவ்வளவுதான் நீட்டி முழக்கினலும் இதில் நம்பகத்தன்மை இல்லை. பத்திரிகை, சஞ்சிகை, ஒலிபரப்புதல் ஆகியவற்றை ஏறக்குறைய உலகிலுள்ள சகல மொழிகளிலும் பிரசாரம் செய்வதற்காக கோடிக் கணக்கான

ரூபிள்களை செலவிடும் ருஷ்யா சந்திரனுக்கு மனிதனை முதன் முதலாக அனுப்பும் ஆற்றல் இருந்திருந்தால் அவ்வரிய சந்தர்ப்பத்தை இழந்திருக்குமா என்ற சாதாரண கேள்விக்கு பதில் சொல்ல ஆசிரியரால் முடியவில்லை. தவிர சந்திரனில் மனிதனை இறக்குவதில் ருஷ்யா தவறியமைக்குக் காரணம் கூறுவதற்காக ஒர் அத்தியாயத்தை செலவழித்திருப்பதைப் பார்க்கும்போது அவரது வாதம் எவ்வளவு பலவீனமானது என்பதை உணர முடிகிறது.

என்னென்ன விதத்தில் விண்வெளி ஆராய்ச்சி மனிதனுக்கு பயன்படக் கூடும் என விதந்துரைத்த ஆசிரியர் இதன் இராணுவ முக்கியத்துவம் பற்றி ஒரு சொல்லேனும் கூறாதது விந்தைதான். ''விண்ணிலுள்ள ருஷ்ய செய்மதிமூலம் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றின் தலைப்புச் செய்தியை அறிய முடியும்'' என குருஷேவ் ஒரு முறை கூறினார். இதன் உட்கருத்து என்னவென்றால் இச் செய்மதிகள் உலகை பல முறை வலம் வருவதால் எந்தவொரு நாட்டைப் பற்றியும் விபரங்கள் சேகரிக்க முடியும் என்பதே. இவ்வாறே பார்க்கப் போனால் மற்றைய நாடுகள் மீது உளவு பார்ப்பதற்கு உளவு ஸ்தாபனங்களும் உயரப் பறக்கும் ஜெட் விமானங்களும் இனிமேல் அவசியம் இல்லை மாறாக இவ்விரு வல்லரசுகளின் செய்மதி ''உளவறியும் மதிகளாக'' செயல்படும். அண்மையில் வங்காள தேசப் போரிலும் மத்திய கிழக்குப் போரிலும் அந்நாட்டு இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து கொடுத்தவையும் இவ்விரு வல்லரசுகளின் செய்மதிகளே. இனிமேல் நடக்கப் போகும் போர்களில் இச் செய்மதிகள் இராணுவ தாக்குதல்களுக்குப் பயன்படலாம் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

இதிலிருந்து பெறப்படும் தர்க்க ரீதியான முடிவு ஒன்றேயாகும். வளர்ச்சியடையாத ஒரு நாடு ஒரு வல்லரசின் தாக்குதலிலிருந்து தப்ப வேண்டுமானால் அதற்கு நிகரான அளவு விஞ்ஞான-தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த மற்ற வல்லரசை நாட வேண்டும். உலக நாடுகளை கூறு போட்டு தம்மிடையே பகிர்ந்து கொள்வதற்கு இவ்விரு வல்லரசுகளுக்கிடையேயும் நடைபெறும் போட்டி முதலில் ஆயுதப் போட்டியாகவும், பின் அணு ஆயுதப் போட்டியாகவும், இப்போது விண்வெளிப் போட்டியாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. இராணுவ தளபாடங்களையும் அணு ஆயுதங்களையும் காட்டி எவ்வாறு தமது கட்டுப்பாட்டிலிருந்து விலக முயலும் நாடுகளையும் (உ-ம் செக்கோஸ்லாவேகியா), தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களையும் (உ-ம்: வியட்நாம், கம்போடியா) பயமுறுத்துவதற்கு இவ்விரு வல்லரசுகளும் பயன்படுத்துகிறார்களோ அதைப்போலவே செய்மதிகளையும் விண்வெளிச் சாதனைகளையும் காட்டி வளர்ச்சியடைந்துவரும் நாடுகளை அச்சுறுத்த

முயலுகிறார்கள். அமெரிக்காவும் ருஷ்யாவும் மிகப் பெரும் செலவில் (இவ்விரு நாடுகளும் இதற்காக செலவிடும் பணத்தொகையைப் பற்றி இந்திரகுமார் மூச்சுக் கூட விடவில்லை) விண்வெளியில் "சாதனைகள்" புரிவது தமது விஞ்ஞான — தொழில் நுட்ப — இராணுவ உயர்ச்சியை பறைசாற்றிக் கொள்வதற்காகவே. தமது பலத்தைக் காட்டி உலக நாடுகளின் மேல் ஆதிக்கம் செலுத்துவதில் இவ்விரு வல்லரசுகளிடையே போட்டியும் அதே சமயத்தில் இணக்கமும் காணப்படுகிறது. இதனால்தான் இவ்விரு வல்லரசுகளையும் மேலாதிக்க வல்லரசுகள் என அழைக்கப்படுகின்றன.

இதை இந்திரகுமார் எவ்வளவு தான் மறைக்கப் பார்த்தாலும் அவரை அறியாமல் முதல் அத்தியாயத்திலேயே, எந்த வல்லரசு மிக உயரிய சக்திபடைத்த அணுகுண்டை வைத்திருக்கிறதோ அந்த வல்லரசே உலகின் அதிக ஆற்றல் படைத்த வல்லரசு என்ற நிலை (இதற்கு முன்) நிலவி வந்தது. இந்த மதிப்பீடு மாற்றமடைந்து, விண்வெளிச் சாதனைகளில் எந்த அரசு முன் நிற்கிறதோ அந்த வல்லரசே உலகின் மிக சக்தி வாய்ந்த வல்லரசு என்ற நிலைமை உருவானது என்று கூறியுள்ளார். இந்த இடத்தில் மட்டுமே ஆசிரியர் உண்மைக்கு மிக அருகாமையில் வந்துள்ளார். ஆனால் இதைப்பற்றி பின் அத்தியாயங்களிலே ஒரு சொல் கூடக் கூறாமல் விண்வெளி ஆராய்ச்சியினால் ஏற்படக்கூடிய சில்லறை நன்மைகளை வரிந்து விரிவுபடுத்தியிருப்பது ஆசிரியரின் ஒரு முனைப் போக்கையே காட்டுகிறது.

மேலாதிக்க வல்லரசுகளிடையே நடைபெறும் போட்டியின் ஒரு அம்சமே விண்வெளிப் பயணங்களும் ஆராய்ச்சிகளுமாகும். இவற்றின் பெறுபேறுகள் எவ்வாறாக இருப்பினும் அவை உலகின் உழைக்கும் மக்களுக்கு குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்களுக்கு எவ்வகையிலும் உதவப் போவதில்லை.

வல்லான் தனது வலிமையைப் பறைசாற்றி மெலியனைப் பயமுறுத்தும் சாதனைகளாகவே இவை அமைகின்றன. விண்வெளிச் சாதனைகளிலிருந்து நாம் பெறவேண்டிய பாடம் இதுவே. இதை விடுத்து மேலாதிக்க வல்லரசுகளின் போட்டாபோட்டியினால் எமக்கு வீசி எறியப்பட்ட எலும்புத்துண்டாகிய செய்தித் தொடர்பு செய்மதித் திட்டத்தை "விண்வெளிச் சகாப்தம் இலங்கையில் உதயமாகிறது" என்று ஆசிரியர் கூறுவது வாலைவிட்டு தும்பைப் பிடிப்பதேயாகும்.

இந்நூலைத் தான் எழுதியதற்கு காரணம் கூறும் நோக்கத்துடன் "புத்தம் புதிய கலைகள் ..............தமிழினில்லை' ...... இந்நிலை வராது தடுக்கும் முயற்சியே இது" என்று வைத்தியக் கலாநிதி க. இந்திரகுமார் பின்னட்டையில் பெரிய எழுத்துக்களில் எவ்வளவு தான் பிரகடனப்படுத்திக் கொண்டபோதும் இந்நூலை வாசித்து முடிக்கையில் உண்மையில் அவர் ருஷ்ய வல்லரசின் விஞ்ஞான — தொழில் நுட்ப — இராணுவ உயர்வுக்கும் அதன் மேலாதிக்க கொள்கைக்கும் வக்காலத்து வாங்குவதையே தனது தலையாக கடமையாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார் என்ற முடிவு தவிர்க்க முடியாதபடி நம் மனதில் எழுகிறது.

★

# கூலிக் குழப்பம்

"என்னப்பா...... நானும் காலமை எழும்பின நேரம் தொடங்கிப் பாக்கிறன்...... என்ன கடுமையா யோசிக்கிறியள்?"

முற்றத்தில் நின்றபடி தென்னை மரங்களுக்கூடாகத் தெரியும் கிழக்கு வானத்தைப் பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்த என்னிடம் தேனீர்க்கோப்பையையும் பனங்கட்டித் துண்டையும் நீட்டியபடி கேட்கிறாள் எனது மனைவி.

உண்மைதான், காலமை எழும்பினநேரம் முதல் இன்னடைக்கு நடக்கிற வேலை நிறுத்தித்திலை பங்கு கொள்ளுறதா? விடுறதா? என்பதைப் பற்றித்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. எனது நாற்பத்தைந்து வருட வாழ்க்கையில் ஒரு சுருட்டுத் தொழிலாளியாகி நான் பட்டு வரும் கஷ்டங்களை நான் நினைத்தபோது என்னையே... நான் மறந்துவிடுகிறேன்.

எட்டு வயதிலேயே பள்ளிப் படிப்பை மறந்து சுருட்டுக்கட்ட வெளிக்கிட்டு வேலை பழகுவதற்காக நான் வேண்டிய காம்படிகள், ஏச்சுப் பேச்சுக்கள்... பின்பு இளைஞனாகி கொழும்பு, மலைநாடு மட்டக்களப்பெல்லாம் தொழில் பார்த்து அலைந்து பெற்ற அநுபவங்கள்... கூலிக் கலம்பகங்களில் முன்னுக்கு நின்று பொயிலைத் தூளெல்லாம் அள்ளி எறிந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் அசைபோட்டுப் பார்க்கிறேன்...

என்னுடைய சொந்த வாழ்க்கையில்—ஏன் என்னைப் போன்ற சுருட்டுத் தொழிலாளியின் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் ஏதாவது முன்னேற்றம், தோட்டம், வயல் இல்லாட்டி... வேறை

—க. தணிகாசலம்

யேதாலும் வருமானமுள்ளவன் கொஞ்சம் மிதந்திருக்கிறான். ஆனால் என்னைப்போலை இதையே நம்பி இருக்கிறவன்பாடு வரவர மோசமாப் போகுது... இரண்டு குமருகளுக்கும் தகப்பனாப் போனன், பெடியன்தான் இப்பவே லீவுநாளிலை வால்ச் சுத்துக் கட்டப்போய் தன்ரை சிலவைப் பார்க்கிறான்... கையிலை மடியிலை ஒண்டுமில்லாமை.. என்னண்டு என்ரை ரெண்டுகுமரையும் கரை சேர்க்கிறது... இந்தத் தலையிடியிக்கை நான் இருக்கிறன்...இதுக்கை அவங்கள் வேலை நிறுத்தமாம்.

'பணங்கட்டியை வாய்க்குள் போட்டு தேனீரை மடமடவென்று வாய்க்குள் ஊற்றிவிட்டு.. கோப்பையை மனைவியிடம் நீட்டுகிறேன்.

''இண்டைக்கு அடையாள வேலை நிறுத்தமாம். நேற்றைக்கு பெடியன் கொண்டுவந்து நோட்டீஸ் குடுத்த பிறகும் முதலாளி பொயிலைக்குத் தண்ணி போடச்சொன்னவர். ஒருக்காப் பாத்திடுவம்.''

''என்ன வேலை நிறுத்தமாமோ உதுக்கே நீங்கள் காலமை எழும்பி யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்.. மனிசர் படுற பாட்டுக்கை உவங்கள் ஒரு பக்கம்... நேற்றைக்கும் வளவுக்காற மனிசி சூத்தகைக் காசுக்கு வந்திட்டுப் போகுது... கடைக்காசு குடுக்காமை கடைப் பக்கம் தலை காட்ட முடியாமைக் கிடக்கு. இண்டைக்குச் சமையலுக்கும் அரிசியில்லை எட கடவுளே இப்பிடியும் ஒரு தலையெழுத்தோ. ஏனப்பா... ... ஏதோ பென்சன் காசோ என்னவோ கழிச்ச காசு இருக்கெண்டீர் அதைக் கேட்டு வேண்டுமன் முதலாளியிட்டை... வீட்டிலை ரெண்டு குமரையும் வைச்சிருக்கிறம்... கழுத்திலை காதிலை... ஒண்டுமில்லை''

அதைத்தானே அவங்கள் அங்கை இஞ்சை யெண்டு ஏமாத்திறுங்கள்.''

''என்ன கழிச்ச காசைத் தாறதுக்கு அவைக்கென்ன வருத்தம்... ஓ அந்தக் காசுகளிலை தான் அங்காலை இளைய மோனுக்கும் வீடு கட்டுகிறான் போலை.. ஏன் நீங்கள் சரியில்லை. நீங்கள் எல்லாரும் ஒண்டா நிண்டு கேட்டால் அவர இல்லையெண்டிடுவாரோ?''

''அதுக் காண்டித் தானே இண்டைக்கு வேலை நிறுத்தம் செய்யிறுங்கள்''

''அப்ப பேந்தெங்கை வெளிக்கிடுறியள் பேசாமை வீட்டிலை இருக்கிறதுக்கு.. இண்டைக்கு வேலைக்குப் போனுப் போலைதானை விடியப் போகுது''

''நான் வேலைக்குப் போகேல்லை. உதிலை போட்டு வாறன்''

அந்த முடிவுக்கு நான் இன்னும் வரவில்லை. மனைவியைச் சமாளிப்பதற்காகச் சொல்லிவிட்டு தெருப்படலையை நோககி நடக்கிறேன். அந்தப் படலையிலிருந்து கூப்பிடு தொலைவில்தான் முத்துலிங்கத்தாரின் சுருட்டுக் கொட்டில். தெருப்படலையைத் திறந்து தெருவின் இரு மருங்கும் திரும்பிப் பார்க்கிறேன். கிழக்குத் தெருவில் சற்று தொலைவில் மூன்று பேர் சயிக்கிள்களுடன் நின்று கதைத்துக்கொண்டிருக்கின்றனர். குழப்பக் காரரோ என்னமோ.. அவர்களது கவனம் என்மீது விழுவதற்கிடையில் கொட்டிலுக்குள் புகுந்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் அடியெடுத்து வைக்கிறேன்.

நான் இண்டைக்கு வேலைக்குப் போறது சரியில்லையெண்டு

எனக்குத் தெரியுது. ஆனல் நேற்றைக்கு சங்கப் பெடியன் நோட்டீசு குடுத்ததுக்குப் பிறகும் பொயிலைக்குத் தண்ணி போடச் சொன்னவன்... நான் இண்டைக்குப் போகாமை விட நீயும் குழப்பக்காறனெண்டு நாளைக்கு நீ வேறை இடத்தைப் பாரெண்டா... இந்தப் பஞ்ச நிலைமையிலை... என்ரை குடும்பத்தின்ரை கதி என்ன? ஏதாவது மருந்து கிருந்தெல்லோ குடிக்கவேணும்...

முதலாளிமார் செய்யிற அநியாயம் எனக்கு விளங்காமலில்லை காலத்தாலை குடிக்கிற தேத்தண்ணியோடை நாங்கள் பசிகிடந்து சுறுட்ட இருபத்தைஞ்சு ரூபா கூலி எண்டுபோட்டு இருபது, இருபத்தொண்டு எண்டு நினைச்ச மாதிரி குடுக்கிறுங்கள் சேம லாப நிதியும் ஒழுங்காக் கட்டிறேல்லை. கட்டின காசுக்கு கணக்கு வரவு இல்லை. பேப்பருக்கு, றேடியோவுக்கு, கோயிலுக்கெண்டு கட்டுகளைக் கழிச்சுப் போட்டு அவங்கள் தாறதை வேண்டிக் கொண்டு பேசாமை இருக்கிறம்... வேலையும் கிரமமில்லை.

ஆனல் உதுகளை வேலைநிறுத்தம் செய்யிறதாலை தீர்க்கலாம் எண்டதிலை எனக்கு நம்பிக்கையில்லை. நானும் எத்தனை கூலிக் குழப்பங்களிலை முன்னுக்கு நிண்டனுன். அதுகளாலை சம்பளங்கள் ஏறினது உண்மைதான் எண்டாலும் கூலி கூட வேலைகள் குறைய சாமானுகள் விலையேற இன்னும் கேவலமான சீவியமொழிய வேறை ஒண்டுமில்லை.

கொட்டில் வாசலை நெருங்கி விட்டேன். இரண்டு மூன்று சயிக்கிள்கள் பின்புறமாக வருகின்ற சத்தம் கேட்கிறது. முகத்தைக் காட்டினல் பிழை என்பதற்காகத் திரும்பியும் பார்க்காமல் எட்டி நடந்து கேற்றைக் தாண்டிவிடுகிறேன். உள்ளே சுருட்டுக் கொட்டில் வெறிச்சோடிக் கிடக்கிறது. நாற்பது பேருக்குமேல் சுருட்டும் அந்தக் கொட்டிலில் நான் மட்டும் தனியாக நிற்கிறேன்.

''என்ன மணியம் வேலைக்கு வந்திருக்கிறுய் போலை கிடக்கு''

உயரமான அந்த விறுந்தையில் நின்று கொண்டே கேட்கிறுர் முதலாளி.

''ஓ பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தனுன்''

எனது பற்களை விலலங்கமாக வெளிக்காட்டிக்கொண்டே சொல்கிறேன். வெள்ளை நாஷனலுக் கூடாகக் கழுத்துச் சங்கிலி மினுங்க நெத்தியில் விபூதிப் பட்டையுடன் விறுந்தையிலிருந்து இறங்கி சுருட்டுக் கொட்டிலை நோக்கி வருகிறுர் முதலாளி.

''என்ன மணியம் பயத்திலை தான் ஒருத்தரும் வேலைக்கு வரேல்லைப் போலை பழைய சங்கக்காறரெண்டா ஒரு மாதிரிச் சமாளிக்கலாம் இவங்கள் ஏதோ புதிதாத் தொடங்கியிருக்கிறுங்க

ளாம். உவங்களை வளரவிட்டாப் பிழை . ம்.. நீயும் வாறியே மணியம்... ஒருக்காப் பொலிசுக்குப் போட்டு வருவம்''

காரும் ஒன்று கேற்றடியில் வந்து நிற்கிறது. நடக்கப் போவதை நான் நன்ருக உணர்ந்து கொண்டேன். அவரது நரிச்குணத்தைப் பார்க்க எனக்கு ஆத்திரம் வருகிறது.

''ஐயோ என்னை ஏன் முதலாளி அங்கை. எனக்கு அலுவல் கிடக்கு'' சமாளித்துக்கொண்டு வெளியே வருகிறேன். கார் புறப்பட்டு விட்டது. இங்கை ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை... ஆனல் சங்கப் பெடியனிலை பொய் என்றி போடுறதுக்குத் தான் போகிருர். புதுப் பெடியனை வெருட்டி விட்டா சங்கத்தை நினையாங்கள் எண்டு அவருடைய எண்ணம்.

மனிசி கூடச் சொன்னது வேலைக்குப் போகவேண்டாம் எண்டு... வராமை விட்டிருக்கலாம். இப்ப ஆரேன் கண்டால் என்னைப் பந்தக் காறன் எண்டு பேசப் போருங்கள். நானும் உப்பிடி எல்லாரும் ஒற்றுமையா நிப்பாங்களெண்டு கனவிலையும் நினைக்கேல்லை.

நானும் தெருவுக்கு வந்து நிமிர... மேற்குத் தெருவிலிருந்து ஒரு சயிக்கிள்ப் பட்டாளம் வருகிறது. அவர்களது உரத்தகதையும் உற்சாகமும் நிச்சயம் கூலிக்குழப்பக்காறர்தான். முறையாகத்தான் ஆப்பிட்டுப் போனன். அப்போதை போன பொடியன்தான் நான் சுருட்டுக் கொட்டிலுக்குப் போனதைக் கண்டிட்டு வேலை நடக்குதெண்டு நினைச்சு குழப்பிறதுக்கு ஆள்ச் சேத்துக் கொண்டு வாருங்கள். சயிக்கிள்கள் நெருங்கிவிட்டன. ஒன்றிரண்டு தெரிந்த முகங்கள்.. தங்களுக்குள் ஏதோ கதைத்துக் கொள்கின்ருர்கள்... சயிக்கிள்கள் வேகம் குறைந்து என்னைச்சுற்றி நிற்கின்றன.

என்ன மணியப்பான் தலையாலையே'.

நக்கலாகத்தான் கேக்கிருன். ஆனைக்கோட்டைச் சோமு. எனக்குப் பதில் சொல்ல நா எழுவில்லை

''எட மணியண்ணையே ... பேந்தென்ன.. இவர்தான் எங்கடை பழைய ஆள். அண்ணை நீங்கள் இல்லாமலும் ஒரு கூலிக்குழப்பமே... ஏறண்ணை பின்னுக்கு''

தருமு நிலைமையை அறிஞ்சு சமாளிக்கிருன் என்பது எனக்கு விளங்குகிறது. நானும் பேச்சு மூச்சில்லாமல் செய்த பிழைக்கு பிராயச் சித்தமாக அவனது சயிக்கிளின் பின் கரியரில் ஏறி அமர்கிறேன். சயிக்கிள்கள் நகருகின்றன...

இனி உங்கையும் வேலையில்லை இனி எங்கை போறது''

''முருகேசுவின்ரை கொட்டிலை ஒருக்காப் பாத்திடுவம்.. வாருங்கோ பின்ஞலை'' பதிலொரு

சயிக்கிள்களிலும் இருபத்தி மூண்டு பேர்... அதிலை நாலஞ்சு பேர்தான் எனக்குத் தெரிஞ்ச முகங்கள். ஐஞ்சாறு பேர்தான் என்னைப்போலை வயநாளிகள்... மிச்சமெல்லாம் இளம் பெடியள் தான், அவர்களுக்கு ஒரே உற்சாகம், ஒரு சிலரின் கைகளில் புகையிலைக் கட்டுக்கள்... இதற்குமுன் குழப்பிய கொட்டிலில அள்ளியதாக இருக்க வேண்டும், குழப்பிய இடங்களில் வெருட்டிய வெருட்டுக்களையும், காம்புக்குள் பதுங்கினதையும், மூட்டைக்குள் ஒழித்ததைப் பற்றியும் மாறி மாறி நகைச்சுவை ததும்பக் கதைத்துக் கொண்டே வேகமாக சயிக்கிளை ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

தருமு எனது வீட்டு நிலைமைகள் வேலை நிலைமையைப் பற்றி விசாரித்துக் கொண்டு வந்தான். நானும் பதில்சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனால் எனது மனதுக்குள் போராட்டம் நடக்கிறது.

இவங்களோடை போறதை முதலாளிக்கு ஆரும் சொன்னல்? பேந்தென்ன உவற்றை கொட்டில் இல்லாட்டி நாங்கள் செத்தே போவம். உவங்கடை கொடுமையளுக் கெதிரா ஏதாலுஞ் செய்யாட்டி மனிசர் சீவிக்கேலாது.

இளைஞர்களது ஒற்றுமையும் உற்சாகமகன கதைகளும் என்னை ஒரு நிலைக்கு வர உதவுகின்றது.

சயிக்கிள்கள் தெருவிலிருந்து இறங்கி குச்சொழுங்கைகளுக் கூடாக வளைந்து வளைந்து செல்கின்றன.

"வீடு வருகுது ஆயித்தமா வாங்கோ"

"முன்னுக்குச் சென்ற ஒரு இளைஞன் எச்சரிக்கை செய்கிறுன். எல்லோரும் கதைகளை நிற்பாட்டி அமைதியாகின்றனர்.

"இதுதான் இடம்"

சயிக்கிள்கள் வேலிகளில் சாய்கின்றன. மின்னல் வேகத்தில் தொழிலாளர்கள் கேற்றைத் தாண்டி உள்ளே ஓடுகின்றனர். நானும் ஓடுகிறேன். ஏழெட்டுத் தொழிலாளர்கள்தான் அங்கு வேலை செய்திருக்க வேண்டும். எல்லோரும் ஓடி ஒழிக்க முயல்கின்றனர். அநேகமாக ஒருவரும் தப்பவில்லை. புகையிலைத் தூள்கள் கொட்டிலெங்கும் பறக்கின்றன. நானும் முன்னல் இருந்த சுருட்டுப் பெட்டிக்கு காலால உதைகிறேன். சுருட்டுகள் சிதறிப் பறக்கின்றன.

"எருமைப் பிறப்புக்கள் எங்கடை ஒற்றுமையீனத்தாலைதானேடா எங்களை இப்பிடி நசுக்கிறுங்கள்"

எங்களுடன் வந்த இளைஞர்களுக்கு ஆத்திரத்தில் கைகால்களும் நீளப் பாக்கின்றன.

இஞ்சை தொழிலாளியளிலை ஒருத்தரும் தொடக்கூடாது அவையளை விடுங்கோ"

புதிய சங்கத்துக்குப் பொறுப்பான அந்த இளைஞன் கண்டிப்பாகக் கூறுகிறான். எல்லோரும் பிடித்திருந்தவர்களைக் கைவிடுகின்றனர்.

"நாங்கள் உரிமையளைப் பெறுகிறதெண்டா ஒற்றுமையா இருக்க வேணும், இந்தப் பிழையை இனிமேல் நீங்கள் விடக்கூடாது. பின்னேரம் சங்கக் கட்டிடத்திலே கூட்டம் இருக்கு .. எல்லாரும் வந்திடுங்கோ"

சுருக்கமாக அந்த இளைஞன் சொன்ன வார்த்தைகள் எனக்கும் உறைக்கிறது. அந்தத் தொழிலாளர்களும் அந்த இளைஞனின் நாணயமான வார்த்தைகளையும் வந்தவர்களின் கட்டுப்பாட்டையும் கண்டு மனந்திறந்து கதைக்கின்றனர். தங்களது பிழையை ஒத்துக் கொள்ளுகின்றனர். இத்தனைக்கும் முதலாளி முருகேசரின் தலையை வெளியே காணவில்லை.

சயிக்கிள் ஊர்வலம் மீண்டும் தொடங்குகிறது. அந்தத் தொழிலாளர்களிலும் மூன்றுபேர் எங்களைத் தொடருகின்றனர்.

அன்று பகல் முழுவதும் சுற்றுப் புறக் கிராமத்து ஒழுங்கைகள், தெருக்களெல்லாம் தேடுதல் நடக்கிறது. ஒரிடத்திலாவது வேலைவைக்க விடவில்லை. எங்கும் வேலைநிறுத்தத்தின் வெற்றியைப் பற்றியே பேச்சாக இருக்கிறது.

அந்தப் புதிய சங்க இளைஞர்களது சக்திகள் எனக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது அவர்கள் சுருட்டுத் தொழிலாளர் போன்ற ஏனைய தொழிலாளர்களின் கஷ்டங்கள் நாட்டு நிலைமைகள் உலக விஷயங்கள் எல்லாத்தைப் பற்றியும் பேசியது எனக்குப் புதுமையாக இருக்கிறது,

இதற்குமுன் நான் ஒருத்தன் தான் எனது குடும்பந்தான் கஷ்டப்படுகிறது என்று நினைத்துச் கலங்கிய எனக்கு எங்களைப் போலேதான் எல்லாரும் கஷ்டப் படுருங்கள். தனித்தனிய நிண்டு பிரச்சனையளைத் தீர்க்கேலாது... ஒண்டாச் சேந்தால் கஷ்டங்களைப் போக்கிறது சுலபம் என்ற நம்பிக்கை என் மனதில் துளிர் விடுகிறது.

மத்தியானச் சாப்பாட்டுக்கும் வீட்டுக்குப் போகவில்லை. மாலை நேர கூட்ட அலுவல்களைப் பார்க்க ஓடித் திரிகிறேன். பொலிஸ்காரர் இருவர் வந்து சங்க இளைஞர்கள் இரண்டுபேரை பொலிஸ் நிலையத்துக்கு வரச் சொல்லிவிட்டுப்போனார்கள். இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த இளைஞர்களை அடக்குவது பெரிய சிரமமாகி விட்டது.

கூட்டம் தொடங்க நேரமாகி விட்டது. பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற இளைஞர்கள் வந்து சேரவில்லை... இந்தக் கூட்டத்துக்கு வந்தால் காப்பிலை கிடையாது என்று முதலாளிகள் எச்சரித்திருந்தனர்... அதற்கு அஞ்சிய ~~தோழர்கள்~~ சிலரைத் தவிர

தொழிலாளர்கள் உணர்ச்சியுடன் கூடி இருந்தனர். கூட்டம் ஆரம்பமாகியது... அனுபவமுள்ள தோழர்கள் சிலர் ஒவ்வொருவராக எழுந்து முதலாளிமார்களின் சுரண்டலையும் அதனால் தாங்கள் படும் இன்னலையும் அதனைப் போக்க அனைவரும் அதனைப் போக்க அனைவரும் ஐக்கியப் படவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினர்.

எனக்குப் பேசவராது இருந்தும் நான் காலையில் விட்ட தவறை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு ஏனைய தொழிலாளர்களையும் அப்படித் தவறை இனிமேல் செய்யவேண்டாம் என்றும் கேட்டுத் திக்கித் திக்கி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினேன்.

சங்கத்தின் மேலிடத்திலிருந்து பார்வையாளராகக் கலந்து கொண்ட நடுத்தர வயதுள்ள ஒருவர் பேசும்போது...

''கூலிக்குழப்பம் என்ற பெயரில் தொழிலாளரைத் தொழிலாளர் எதிர்க்கிற அளவுக்கு நிலைமையை நீங்கள் இனியும் வளரவிடக் கூடாது. அதை முதலாளியளுக்கெதிரான கூரிய ஆயுதமாகப் பாவிக்க வேணும். இப்படியான வேலைநிறுத்தங்கள் தொழிலாளர்கள் ஐக்கியப் படுவதற்கும் ஒன்றுபட்டு செயல்படுவதற்கும் அவசியம்தான், ஆனால் இதுகளாலை மட்டும் எங்கடை பிரச்சனையளுக்குத் தீர்வுகாணேலாது. வேலை நிறுத்தங்களாலை ஒரு பக்கத்திலை சம்பளம் உயர மறுபுறத் தாலை விலையளும் உயரும். எனவே நாங்கள் ஒரு அரசியல் மாற்றத்துக்காக ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலம்தான் எங்களது பிரச்சனைகள் தீரும்.''

எனது மனதில் எழுந்த ஐயத்துக்கு விடை கிடைத்து விட்டது. வெறும் வேலை நிறுத்தத்தாலை பயனில்லைத்தான்.

கூட்டமும் முடிய பொலீசுக்குப் போன இளைஞர்களும் வந்து சேருகிறார்கள். அவர்களைச் சுற்றித் தொழிலாளர் கூடுகின்றனர்.

''அங்கை ஒண்டும் நடக்கேல்லை சாட்சியில்லாமல் என்றியைப் போட்டு என்ன செய்யிறது? உது மட்டுமே உதைப் போலை பல தில்லு முல்லுகளை முதலாளிவர்க்கம் தன்ரை அழிவு காலம் வரைக்கும் செய்யும். எங்கடை ஒற்றுமைக்கு முன்னாலை உதுகள் என்ன செய்யிறது''

ஐக்கிய உணர்வுடன் கூட்டம் கலைகிறது. நானும் அந்த இளைஞர்களிடம்விடை பெற்றுக் கொண்டு புறப்படுகிறேன்.

காலையில் வெளிக்கிட்ட என்னை எதிர்நோக்கி மனைவியும் பிள்ளைகளும் காத்திருக்கின்றனர்.

''என்ன கூலிக் குழப்பத்தோடை அள்ளுப் பட்டியளோ'' மனைவி நகைப்போடு கேட்கிறாள்.

''ஓ... இனிச் சும்மா இருக்கேலாது... சரியாய் சிந்தித்து செயல் பட்டால்தான் பிரச்சனையள் எல்லாம் தீரும் என்று நிதானமாகக் ~~கூறினேன் [illegible]~~. ★

[illegible handwriting]

# திருக்கோணமலை மாநாடு

## ஒரு கண்ணோட்டம்

—இமையாரன்

கடந்த யூன் 22ம், 23ம் திகதிகளில் திருக்கோணமலையில் எழுத்தாளர் கலைஞர் மாநாடு நடைபெற்றது. ஐந்து பெயர்களைக் கொண்ட ஸ்தாபனங்களின் சார்பில் நடைபெற்ற இம் மாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து எழுத்தாளர் கலைஞர் வந்திருந்தனர். எழுத்தார்வம் மிக்க இளம் எழுத்தாளர்கள் பெருமளவில் கூடி இருந்த இம் மாநாட்டில் முதிர்ந்த எழுத்தாளர் இலை மறை காய் போல் கலந்து கொண்டனர். அ. இ. மு. எ. சங்கத்தின் தலைமைக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும், தகராறுகளும் மட்டுமல்லாயல் எழுத்தாற்றல் மிக்க இளம் சக்திகள் அ. இ. மு. எ. சங்கத்தின் தவறான தலைமையின் கொள்கையின் மீது கொண்டுள்ள வெறுப்பும் அதிருப்தியும்தான் திருமலை மாநாடு அவசர அவசரமாகக் கூட்டப்பட்டதற்கான பின்னணியாகும் என்பதை மாநாட்டு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின.

மாநாட்டு நிகழ்ச்சிகள் ஏழு பேர் கொண்ட தலைமைக் குழுவினால் தலைமை தாங்கப்பட்டது. பதினான்கு பக்கங்களைக் கொண்ட ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இன்றைய கால கட்டத்திற்கான கலை இலக்கிய கொள்கை பற்றியும், உருவங்கள, உள்ளடக்கம். அந்நிய கலாசாரத்தின் நச்சுத்தனமான ஊடுருவல், அதி தீவிர உதிரி இலக்கியப் படைப்புகள் வர்க்க சமரசத்திற்கான படைப்புகள் போன்ற பிரச்சினைகளில் அறிக்கை குறிப்பிடத்தக்க சரியான கொள்கையைக் கொண்டிருக்கிறது.

மேலும் எமது நாட்டின் பிரதான முரண்பாடு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் பெருமுதலாளித்துவம் ஆகியனவை ஒரு புறமும் உழைக்கும் மக்கள் மறுபுறமுமான இரு தரப்புக்குமிடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு எனவும், சமூக ஏகாதிபத்தியத்தின் அபாயம் வளர்ந்து கொண்டு வருவதையும், அதன் ஊடுருவல் பற்றியும், பிரசார சாதனங்கள் பற்றியுப் எச்சரிக்கை செய்ததுடன் இதுவும் ஒரு முரண்பாடாக வளர்ந்து வருகின்றது என்பதையும் அறிக்கை எடுத்துக் காட்டியது. மேலும் பாராளுமன்றப் பாதையை நிராகரித்தும், புதிய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டத்தை துரிதப்படுத்தும் நிதானமான இலக்கியப் படைப்புக்க

ளின் அவசியம் பற்றியும் அறிக்கை சுட்டிக் காட்டியது. தேசிய இனப் பிரச்சினை பற்றியும் அதன் தீர்வுக்கான அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் அறிக்கை குறிப்பிடத்தக்கவிதத்தில் சுட்டிக் காட்டியது. எழுத்தாளர்கள் தங்களை எவ்வாறு மக்கள் மத்தியில் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும், மக்களுக்கு மேலால் தம்மை தனி ஒரு பிரிவாகக் கருதக் கூடாதெனவும், அறிக்கை எடுத்துக் கூறியது.

மேற்படி பிரதான அம்சங்களைக் கொண்ட அறிக்கை மீது நீண்ட விவாதங்கள் நடைபெற்றன. சிலர் விளக்கம் பெற விவாதித்தனர், சிலர் குழப்பம் உண்டாக்க விவாதித்தனர். சிற்சில திருத்தங்களுடன் அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டாம் நாள் கதை அரங்கு, கவி அரங்கு, கருத்தரங்கு கலை நிகழ்ச்சிகளுடன் மாநாடு முடிவுற்றது.

மொத்தத்தில் இம் மாநாடு இன்றைய சுரண்டல் அமைப்பையும், பாராளுமன்றத்தையும் எதிர்த்து மக்களுக்கான புரட்சிகர கலை இலக்கியம் படைக்க வேண்டும் என்ற அவாவுடன் எழுதும் இளம் எழுத்தாளர்களின் முதல் சந்திப்பு என்ற வகையில் குறிப்பிடத்தக்க ஒரு மாநாடாகும். அதேவேளை முதிர்ந்த எழுத்தாளர்கள் மக்களிடம் ஆழமாகச் சென்று தமது தவறுகளில் இருந்து சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டியதன் அவசியத்தையும் இம் மாநாடு கவனப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. அனுபவ வாதம், செருக்கு, இன்றைய இளம் எழுத்தாளர்களை குறைத்து மதிப்பிடும் போக்கு, தங்களால் எதுவும் செய்ய முடியும் என்ற ஆணவம், ஆகியனவை நிச்சயம் முதிர்ந்த எழுத்தாளர்கள் மத்தியில் இருந்து மறைய வேண்டும் என்பதையும் மாநாட்டு அறிக்கை முதல் பேச்சுகள் வரை எடுத்துக் காட்டின. அதே வேளை இளம் எழுத்தாளர்கள் தத்துவத் தெளிவோடும், நீண்டகால நோக்குடனும், மக்களை அணி திரட்டும் கஷ்டமான பணிக்கு நிதானமாக தமது எழுத்தாற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் மாநாட்டு நடைமுறைகள் எடுத்துக் காட்டின. வெறும் சண்டமாருத அதி தீவிர வசனங்களை எழுதுவதால் மட்டும் மாற்றங்கள் நடைபெறுவதில்லை என்பதையும் பலரது பேச்சுக்கள் சுட்டிக் காட்டின.

சரியான அத்திவாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இம் மாநாடு தொடர்ந்து இளம் எழுத்தாளர்களை எவ்வழியில் இட்டுச் செல்லப் போகிறது என்பது எல்லோரும் கேட்கும் கேள்வியாகும். தெளிந்த தத்துவார்த்த அரசியல் பார்வையுடனும் ஸ்தாபன ரீதியிலான கட்டுப்பாடான நடைமுறைகளுடனும் செயல்பட்டால் அன்றி சந்தர்ப்ப வாத ரீதியில், அல்லது முகஸ்துதிக்கு செயல் பட்டால் நம்பிக்கைக்கு

ரிய இளம் சக்திகளின் ஆற்றல் அநாவசியமாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் சாதாரணமாகவே நிலவுகின்றது. இதை மாநாட்டின் அமைப்பாளர்களும் அல்லது அதன்பின் வந்த செயல் குழுவும் மனதில் இருத்திக்கொள்வது அவசியம். அறிக்கையில் எழுதுவதோ அல்லது பேச்சுகள் நிகழ்த்துவதோ ஏன் அவசர அவசரமாக ஒரு மாநாடு கூட்டுவதோ சுலபம். ஆனல் நீண்ட கால நிதான நோக்குடன் விஷயங்களைச் செயல் படுத்துவதே கஷ்டம். இந்த கலை இலக்கியப் பணி பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் உண்மையான மக்கள் இயக்கத்திற்கு உரம் ஆக்கப்படாவிட்டால் அவை யாவும் புறக்குடத்து நீர் ஆகிவிடும்.

மாநாட்டைத் தொடர்ந்து அதன் செயற்குழு எவ்வாறு செயல்படப் போகிறது என்பது தான் கேள்விக்குரிய விஷயம். சற்று பொறுத்திருந்து பார்ப்பதே சிறந்தது.

---

நீதிபதி: என்ன! சென்ற வாரம் நீ விபச்சாரத்தில் ஈடுபட்டதற்காக 50 ரூபா தண்டம் விதித்து இன்றைய தினத்தில் பணம் கட்டுவதற்கான தவணையும் தந்தேன். ஆனல் திரும்பவும் அதே குற்றம் செய்து குற்றவாளிக் கூண்டில் நிற்கிருயே.

பெண்: பிரபு! தாங்கள் விதித்த 50 ரூபா பணத்தை குறித்த தவணையில் கட்டுவதற்காகவே நான் விபச்சாரத்தில் ஈடுபட்டேன்.

★

மாணவன்: ஏன் சார் நீங்கள் ஒரு வருடம் முந்தி பென்சன் எடுக்கப் போறீங்கள்?

ஆசிரியர்: நான் முழு நேர அரசியலில் ஈடுபடப் போகிறேன்.

---

# பாவலரே!......

—பாமரன்

உடல்வருத்தி உழைக்கின்ற உழைப்பாளி—ஒருவேளை
உணவுதனை உண்பதற்கும் வழியற்றுத் தவிக்கையிலே
அவனுழைப்பை உறுஞ்சுகின்ற மற்றொருவன்
மாடியிலே கோடிசுகம் மகிழ்ச்சியுடன் காணிப்பதற்கு
உரிமைதந்து ஆயுதப் படைகளினால் காத்துவரும்
போலி ஜனநாயக அமைப்பதனைத் உடைத்தெறிய
பாவிசைத்துப் பல கவிதை பாடுகின்ற பாவலரே!
உதிரிகளாய்த் திரிந்து நாங்கள் உரக்கக் கத்தி
நாறிவரும் சமூகமதை நையாண்டி செய்ததினால்
பல்லுடைக்கும் சொல்வீச்சில் பலகவிதை பாடுவதால்
நான்கு பேர் கூடி நள்ளிரவில் திட்டமிட்டு
ஒருசில முதலாளிகளின் சிரமதனை அரிவதனால்
ஆகிவிடும் சமதர்மம் என்கின்ற தத்துவத்தில்
ஏமாற்றுத் தன்மைகளை முற்றும் நிராகரித்து
உழைப்பாளி வர்க்கத்தின் உறுதிமிக்க தலைமையின்கீழ்
உழுதுண்டு வாழுகின்ற விவசாய வர்க்கமுடன்
புத்தியினால் ஜீவிக்கும் புத்திஜீவி-மாணவர்கள்
வேலையற்றுத் தெருத்தெருவாய் அலைகின்ற வாலிபர்கள்
சிறுமுதலில் சீவிக்கும் சிறிய முதலாளிகளும்
ஓரணியாய்த் திரண்டெழுந்து பேரணியாய் நின்றிங்கே
புதிய ஜனநாயகப் புரட்சிதனை செய்கின்ற
நோக்குடனே இயங்குகின்ற இயக்கமதில் நாமிணைந்து
மக்களிடம் கற்றதனை மக்களிடம் கொடுக்கின்ற
மகத்தான விதிமுறையை இலக்கணமாய் கொண்டு நாம்
பாடுகின்ற கவிதைகளை தொடங்கி விட்டால்
நிச்சயமாய் நாம்பாடும் கவிதையது
தொழிலாளர், விவசாயி வாழ்வில் விடுதலைக்கு
பேருதவி-ஆற்றிநிற்கும் என்பதனில் ஐயமில்லை

சிறுகதை

# காலத்தின் கோலம்

— அல்வைக் கலா —

பொன்னம்பல வாத்தியார் இப்போதுதான் ஊருக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். தன்னுடைய வாழ்வின் பெரும்பகுதியை மலைநாட்டிலும், வன்னிப் பகுதியிலும் கழித்துவிட்டு வந்த வாத்தியாருக்கு ஊருக்குள் காலடி வைக்கும்போதே ஏதோ ஒரு புண்ணிய பூமியை மிதிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

இருபது வருடங்களின் முன்னர் மனைவியுடன் ரயிலேறியவர் தான் வாத்தியார். இடையில் கந்தையா அம்மானின் சாவீட்டிக்கும், மயிலண்ணனின் மகளின் திருமணத்துக்கும் என்று இரண்டொருமுறை சென்று வந்தது டன் ஊருக்குள் அவருடைய 'திக்' விஜயம் நின்று விட்டது.

ஊராரைப் பொறுத்தவரை பொன்னம்பல வாத்தியார் ஒரு புதிர். வாத்தியாரின் தந்தையும் பாட்டனும், ஏன் வாத்தியாரின் பரம்பரை வழிவந்த அனைவருமே சாதியாசாரத்தைப் பேணுபவர்களாயும், கீழ் நிலையிலுள்ளவர்களிடம் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுபவர்களாயுமிருக்க, பொன்னம்பல வாத்தியார் மட்டும் தானுண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கிக் கொண்டதுடன் ஊர்ப்பக்கமே தலைவைத்துப் படுக்காததும் ஒரு புதிர்தானே. தாம்பத்திய உறவின் இரகசியங்களைப் பூரணமாக அனுபவிக்காத நிலையிலேயே இளம் மனைவியை ஆஸ்த்மாவுக்குப் பலிகொடுக்க நேர்ந்த அடிதான் வாத்தியாரின் இந்த விரக்தி நிலைக்குக் காரணமென்று பலர் நினைத்ததும் உண்டு.

தன்னுடைய இந்தப் போக்குக்குக் காரணமென்னவென்று வாத்தியாரே பலமுறை தனிமையில் இருந்து சிந்தித்திருக்கிறார். அப்போதெல்லாம் அவருடைய சிந்தனைகளையும் விஞ்சி அவருடைய மனைவிவிசாலத்தின் தோற்றந்தான் அவர்முன் நிழலாடும்.

விசாலத்தின் தோற்றத்தை மனக் கண்ணில் கொண்டுவந்து நிறுத்தியதுமே அவருடைய கண்களிலும் நீர் கோத்துவிடும். விசாலம் இன்று இருந்திருந்தால் வாத்தியாரும் முற்போக்கான சில எண்ணங்களைக் கொண்டவராகவாவது மாறியிருப்பார்; அந்த நிலைக்கு விசாலம் அவரைக் கொண்டுவந்திருப்பாள். அவர் மட்டும் அதிகார மிடுக்கில் குறைந்தவரா, என்ன? இருந்தாலும் வாத்தியாரின் அந்த எண்ணங்கள் யாவும் மழுங்க அடிக்கப்பட்டதற்குக் காரணம் விசாலம்தான்.

இவ்வாறெல்லாம் ஏற்படுமென்று தெரிந்திருந்தால் விசாலம் பற்றிய எண்ணத்தையே தூர வீசியெறிந்திருப்பாரோ என்னவோ, அந்த நாட்களில் விசாலமே வாத்தியாருடைய எண்ணமெல்லாம் நிறைந்திருந்தாள் என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக விசாலத்தின்மீது ஏற்பட்ட ஒருவித மயக்கவெறிதான் அவரை அவ்வளவு தூரம் ஆட்டிப்படைத்தது என்றும் சொல்ல முடியாது. விசாலத்தின் சின்னம்மாவின் கணவனின் வழிவந்த ஒருத்தி யாரோ ஒரு கோவியனுடன் ஓடிவிட்டாள் என்பதற்காக விசாலத்தைப் பொன்னம்பல வாத்தியார் மணக்கக்கூடாது என்பதில் என்ன நியாயமிருக்கிறது என்று வாத்தியார் கூடத் தன்னையே கேட்டுக் கொண்டதனுற்றான் விசாலத்தை மணப்பதில் அவ்வளவு தீவிரமாக நின்றார். அதுவே தனது சகோதரங்களுடன் தீராத ஒரு பகையை ஏற்படுத்தி, நியாயமாகச் சேரவேண்டிய சில சொத்துக்களைக் கூடச் சேரவிடாமற் செய்யுமென்று வாத்தியார் கண்டாரா?

அப்போதெல்லாம், வெள்ளாளக் குடும்பத்தில் பிறந்தாலும் கூட, பொருளாதார வளம் குன்றிய குடும்பத்திலிருந்து வந்தவளென்பதாலேயே வாழ்க்கையில் தான் கற்றுக்கொண்ட பாடம் இதுதான் என்று விசாலம் அடிக்கடி கூறிக்கொள்ளும் சில வரிகள் இப்போதும் வாத்தியாரின் காதில் ஒலித்துக்கொண்டிருக்கும்.

"இந்தக் காலத்திலை கையிலை பசை உள்ளவன் இல்லாதவன் என்பதில் தாங்க எல்லாம் தங்கியிருக்கு. இந்தக் குலம், கோத்திரமெல்லாம் காசுக்கு முன்னுலே தலைகாட்டுமோ, பாருங்கோ. நானும் ஒரு பணக்காரக் குடும்பத்திலை பிறந்து சொத்துப் பத்துடையவளாயுமிருந்தால், எங்களுக்கே தெரியாத யாரோ ஒரு உறவுக்காரி கோவியனுடன் ஓடிவிட்டாள் என்பதைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு உங்கடை ஆக்கள் எங்கடை கல்யாணத்துக்குத் தடையா நிற்பினமோ, சொல்லுங்கோ?"

விசாலத்தின் முன் வாத்தியார் வாய்மூடி மௌனியான சந்தர்ப்பங்கள் பல. என்னதான் விசாலத்தின் நினைவு மேலோங்கி நின்றாலும் கூட, ஆலயத்திறப்பு, தேநீர்க்கடைத் திறப்பு பற்றிப் பத்திரிகைகளில் படிக்கும் வேளை

களில், வாத்தியாரின் பரம்பரைக்கே உள்ள 'அந்தக் குணம்' எட்டிப் பார்க்கத்தான் செய்யும். 'தங்களுடைய ஆட்கள் இவ்வளவு தூரம் அவங்களைத் தலையெடுக்க விட்டது தவறுதான்' என்று வாத்தியார் நினைத்துக் கொள்வார். ஆனால் இவ்விஷயத்தில் வாத்தியாரின் நிலை மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாத அவஸ்தை நிலைதான். சாதிக் கலவரங்களின் போது தங்களுடைய ஆட்கள் பொலீசுக்கும் அதுக்கும் இதுக்குமென்று எவ்வளவோ பணத்தை விரயமாக்கியிருக்கிறார்களென்றும், அதனாலேயே சிலர் ஒட்டாண்டிகளாய்க் கூட ஆகியிருக்கிறார்களென்றும் கேள்விப்பட்டபோது எங்கே ஊருக்குள் சென்றால் சிறுகச் சிறுகச் சேமித்துவரும் தன்னுடைய முதலுக்கும் பங்கம் வந்துவிடுமோ என்ற பயமும்தான் வாத்தியாரின் மனையக நிரந்தரவாசம் என்பதும் உண்மை. அப்போதெல்லாம் வாத்தியாரின் மிடுக்கு "இவையெல்லாம் காலத்தின் கோலம்" என்ற முணுமுணுப்போடு நின்றுவிடும்.

இன்று பாடசாலைக்கு வரும் போதே வாத்தியாரைக் கடந்து சென்ற கந்தப்பனுடைய மகனும் மருமகளும் இப்போதும் வாத்தியாரின் மனக்கண்ணில் நின்று நர்த்தனமாடிக் கொண்டு தானிருக்கிறார்கள்.

போனவை சும்மா போயிருக்கக் கூடாதோ? "மாஸ்டர் ஊருக்கு மாற்றம் போலை" என்று ஒரு நக்கல் சிரிப்போடெல்லோ போயினம். அவளுடைய சட்டையும் சீலையும். ஆள் கொஞ்சம் கறுப்பியென்றாலும் முகவெட்டானவளாகத் தான் இருக்கிறாள். அவளுடைய உடுப்புத்தான் அவளை உவ்வளவு தூரம் எழுப்பிக் காட்டுது. அந்தக் காலத்திலை

---

## அச்சுக்கூடங்களில்..

அச்சகத்து அறைகளிலே
அடித்தடித்துத் தேய்ந்துவிட்ட
அச்செழுத்துப் போலெங்கள்
ஆயுள்கள் தேய்ந்துவர!
ஒவற்றைம் பகலிரவாய்
உழைத்தாலும் பயனில்லை!
எங்கள் உழைப்பதனை
உறிஞ்சுகின்ற முதலாளி
கொப்பியிலே ஸ்கேல்கணக்கு
கொடுப்பதுவோ கால்வாசி
கட்டிபதைக் கேட்டுவிட்டால்
விட்டுவிட்டுப் போ வெளியே
வேறிடத்தைப் பார்த்துக்கொள்,
சட்டென்றே சொல்லுகிறான் —
சட்டங்கள் என்னசெய்யும்?
சட்டைக்குள் காசிருந்தால்
சட்டங்கள் சேவை செய்யும்!
விட்டுவிட்டுப் போய் நாங்கள்
பட்டினியால் சகிறதா?
வேளைவரும் வெகுவிரைவாய்
வேலைசெய்வோம் மக்களிடம்
வேறெமக்கு வழியில்லை
விடுதலைக்குப் பாதையிங்கே
வர்க்கத்துப் போரால்தான்
சொத்தெல்லாம் பொதுவாகும்.

—தணிகையன்—

அம்மன் கோயில் திருவிழா வுக்கு ஒரு நாள் உவங்கடை பெண்டுகள் சட்டை போட்டுக் கொண்டு வந்ததைக் கண்டு அப்ப ஆக்கள் கொதித்துக் கொக்கத் தடியாலை சட்டையைக்கிழித்த காலம் மாறி இன்றைக்கு எங்களுக்கெல்லோ நாகரிகம் படிப்பிக்க வந்திட்டினம்.''

வாத்தியாரின் கொதிப்புக்குச் சிகரம் அமைத்தாற்போல் அமைகிறது ஹெட்மாஸ்டரின் போக்கு. மலையகத்திலும் வன்னியிலும் பொன்னம்பல வாத்தியார் படிப்பித்த பாடசாலைகளில் அல்லது வாத்தியாருடன் இன்னொருவர் மட்டும்தான் ஆசிரியர்கள். ஹெட்மாஸ்டர் தனக்கு ராஜோபசாரம் செய்யவில்லை என்ற ஆத்திரத்தில் வாத்தியார் மறுகுகிறார்.

''எத்தனை வருச சேவிஸ் உள்ள எனக்கல்லோ பெடியன் படிப்பிக்கிறான். மாதகல்க் கரையாம் பெடியன் ஒருத்தன் சட்டம் போட எங்கடை ஆக்களுமல்லோ அவனுக்குக் கீழை இருந்து வேலை செய்யினம். உவன் வந்த உடனயே உவனுக்கு மாற்றம் எழுதிப்போட எங்கடை ஆக்களும் எம். பீ. மாரும் எங்கை போயிட்டினம். வந்ததும் வராததுமாக ''மாஸ்டர் இந்தாருங்கோ உங்கடை பாட அட்டவணை, முதல் பாடம் ஏழாம் வகுப்புக்குத் தமிழ்'' என்றுதான் இட்டது தான் சட்டம் என்ற மாதிரியல்லோ அதைத் தூக்கித் தாறான் ''

தன்னுடைய மிடுக்கு எப்படித்தான் இத்தின நாட்களாக அடங்கிக் கிடந்ததோ என்று தனக்குள்ளாகவே வியந்தபடி வகுப்பினுள் நுழைந்த வாத்தியாருக்கு மேலும் திகைப்பு.

'அண்ணருடைய பெடியனைக் கடைசி வாங்கிலை இருத்தி இருக்கினம். ஆர் இது? ...... மொனிற்றர் போலை... அதுதான் முதல்வாங்கிலை இருந்து கொண்டு வகுப்பையும் சத்தம் போடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.'

'குட் மோனிங் சேர்'

'வணக்கம், இருங்கோ'

'இப்போ என்ன பாடம், தமிழெல்லே? ..... உங்களுக்குத் தமிழ் எடுத்த வாத்தியார் கடைசியாக என்ன படிப்பித்தவர்?'

'செய்வினை, செயப்பாட்டு வினை'— மாணவர்கள் அனைவரும் ஒரே குரலிற் சொல்கின்றனர்.

'நல்லது, நாங்கள் இன்றைக்குத் திரும்பவும் அதையே படிப்போம் .. எங்கே இதைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக்கிச் சொல்லுங்கோ.

''பூனை குடித்தது''

'தெரிந்தவை கை உயர்த்துங்கோ'

'தம்பி சொல்லு, தம்பிக்கு என்ன பெயர்?'

'சுந்தரேசன்'

'ஆ, சொல்லும் பார்ப்பம்'

'பூனையாற் குடிக்கப்பட்டது'

'சரி, கெட்டிக்காரன் சுந்தரேசனைத் தவிர மற்றவை ஒருத்தரும் படிக்கிறதில்லைப் போலிருக்கு.. எல்லரும் இருங்கோ. இங்கே பாருங்கோ..... 'பூனை குடித்தது' என்பது செய்வினை வாக்கியம். இதைச் செயல்பாட்டு வினை வாக்கியமாக மாற்றும்போது செய்வினை வாக்கியத்தின் செயப்படுபொருள் செயல்பாட்டு வினை வாக்கியத்தின் எழுவாயாக மாறும் ..... பாருங்கோ, ''பூனை குடித்தது'' என்பதில் செயப்படுபொருள் 'பால்', பூனை பாலைக் குடித்தது. இது செயப்பாட்டு வினை வாக்கியத்தில் எழுவாயாக வரும் ... எப்படி? ''பால் பூனையாற் குடிக்கப்பட்டது.'' எது குடிக்கப்பட்டது? 'பால்', அப்போ இங்கு எழுவாய் என்ன?

'பால்'

'சரி, ஆனால் சில செய்வினை வாக்கியங்களைச் செயப் பாட்டு வினை வாக்கியங்களாக மாற்ற முடியாது. உதாரணத்துக்குப் பாருங்கோ... ''ஒல்லாந்து கடல் மட்டத்திலிருந்து மிகவும் தாழ்ந்த ஒரு நாடாகும்'' இதில் செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்களை செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்ற முடியாது, விளங்குதோ...?'

'ஓம்'

'இப்போ இந்த வாக்கியத்தைத் சரியாகச் செயப்பாட்டு வினை வாக்கியமாக்கிச் சொல்லுறவைக்கு நான் ஒரு பரிசு தரப் போறன்... கவனியுங்கோ......'' திருக்குறளை மேனாட்டாரும் போற்றிப் புகழ்கின்றனர்,'' கடைசி வாங்கிலை இருந்து சொல்லிக்கொண்டு வாருங்கோ'

---

## அதிதீவிரம்...?

காற்று அடித்தபோது
கனமாகப் பறந்து
'வானத்தைப்' பிடிக்கச்சென்ற
அந்தப் 'பஞ்சு'-
அந்தக் காற்று
ஓய்ந்ததும்......
வேகமாக
கீழ்நோக்கி வந்து
முட்கொம்பில் தொங்கி
ஓய்வெடுத்துக் கொண்டது!

— ஷெல்லிதாசன்

---

மாணவர்கள் ஒவ்வொருவராக எழும்பி மௌனமாக நிற்கின்றனர்.

'ஆ...தம்பி சொல்லு, பெயர்?'

'கந்தசாமி'

'கந்தசாமி சொல்லப்போறார், எங்கே?'

'மேனாட்டார் திருக்குறளால் போற்றப்படுகின்றனர்'

'பிழை, மற்றான்...... மற்ற ஆள்... சுந்தரேசன்?'

'திருக்குறள் மேனாட்டாரால் போற்றிப் புகழப்படுகிறது'

'கெட்டிக்காரன். இன்னுஞ் சரியாகச் சொன்னால் "திருக்குறள் மேனுட்டாராலும் போற்றிப் புகழப் படுகிறது" ஏனென்ருல் பாருங்கோ, செய்வினை வாக்கியத்தில் 'மேனுட்டாரும்' என்று 'உம்' மும் சேர்ந்து வாறதால் செயப்பாட்டு வினை வாக்கியத்திலும் 'மேனுட்டாராலும்' என்று சொல்ல வேண்டும்...

சுந்தரேசன்தான் கெட்டிக்காரன், மொனிற்றரும் சுந்தரேசனே?'

'ஓம் சேர்'

'சுந்தரேசனுடைய அப்பாவுக்கு என்ன பெயர்

'சின்னக்குட்டி'

வாத்தியாரின் முகத்தில் எங்கிருந்துதான் இருள்வந்து சூழ்ந்ததோ தெரியவில்லை, தனக்குள்ளே கேட்டுக் கொள்கிருர்.

'அப்படி இருக்குமோ?... சே இருக்காது. அப்படியான பெடியனை ஏன் மொனிற்றராய் போடனும்?'

'சுந்தரேசன் எங்கே இருக்கிறது'

'செம்பாட்டுத் தெருவிலை'

வாத்தியாரின் முகத்தில் மேலும் கருமேகங்கள் கவிகின்றன. இதுவரை அடங்கியிருந்த உணர்வுகளும் எண்ணங்களும் உடைத்துக்கொண்டு கிளம்புகின்றன.

வாத்தியாருக்குத் தலைகால் தெரியாத கோபம். என்ன செய்கிருேம் என்பது தெரியாமலே மேசைமீது கிடந்த பிரம்பை நோக்கிப் பாய்கிருர். "மூத்திரம் பெய்யத் தெரியாத முளையான்ரை கதையைப்பார் எனக்குப் படிப்பிக்க வந்துவிட்டார் ஆ" என்று கத்தும் வாத்தியாரின் மனக்கொதிப்பு உயர்ந்து உயர்ந்து தாழும் அவரின கை வீச்சில் தெரிகிறது.

அந்த நிலையிலும் சுந்தரேசன் விரைத்து நின்றபடி சத்தமேதும் எழுப்பாமல் பிரம்பின் வீச்சுக்களைத் தாங்கிக் கொண்டிருக்கிருன். ஆழ்ந்த இரவில் கேட்கும் நாய்களின் குரைப்பொலிக்கும், அமைதியைக் கிழித்துக் கொண்டெழும் ஜீப்பின் உறுமஒலிக்கும் அந்தம தெரிந்து தம்மினத்தவர்களை எச்சரிக்கை செய்யக்கூடிய நிலையிலுள்ள சுந்தரேசன் போன்ற சிறுவர்கள், வாத்தியார் போன்றவர்களுக்கே பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய அனுபவங்களையும் துன்பங்களையும் இச்சிறுவயதிலேயே பெற்றிருக்கிருர்களென்பது, ஊரின் நடப்புக்களையும் மாற்றங்களையும் ஜீரணிக்கப்பயந்து வெளியூர்களிலேயே பதுங்கிக்கொண்ட பொன்னம்பல வாத்தியார் போன்ருேருக்கு எங்கே விளங்கப் போகின்றது?

# தூசியினை துரத்துவது துடிப்புத்தானடி

சண்முகம்

புரட்சிப் பெண்ணே
புரட்சிப் பெண்ணே புரியவில்லையா
புதுப்பாடல் பாடுகின்றேன் கேட்கவில்லையா
எச்சிலிலே தேடி தேடி களைக்கவில்லையா
மூச்சுபோகும் நாற்றம் இங்கு முழுகவில்லையா
குப்பை மேட்டு நாய்களோடு குமுறவில்லையா
குலைந்த வாழ்வை மாற்றுதற்கு மனம் இல்லையா
கொந்தளிக்கும் வயதை என்னால் நிறுத்த
முடியுமா

குருதியெல்லாம் உறைந்துவிட்டால்
கொட்ட முடியுமா
கிழட்டுவர்க்கம் கிட்டவந்து கிள்ளுவானடி
கிலியோடு எதிர்நீச்சல் போடுறானடி
தூசியினை துரத்துவது துடிப்புத்தானடி
துயரத்தினை துரத்துவது துவக்குத்தானடி

# பூக்கும் பொதுமை

— வ. இராமுவேல்

பாய் இன்றித் தூங்கு மெங்கள்
பரிதாபம் தெரியவில்லை; தினம்
பட்டினிச்சாவு விதம் உங்கள்
பார்வைக்குப் புரியவில்லை
வாயின்றி வயிறில்லை; இந்த
வறியவர்க் இங்கே பரிவுமில்லை
ஆமாம்; புரட்சியின்றி நாட்டில்
பொதுமையும் பூப்பதில்லை

பசியோடு வாடும் நாங்கள்......
பட்டினிபோடு முங்கள்
'குசி'யெல்லாம் பறந்துபோகும்
கொடுமைகள், தீய்ந்துவேகும்
கசிந்திடும் கண்ணீர் வெள்ளம்
கடலெனப் பொங்கியெழுந்தால்...
அழிந்திடும் உங்கள் கூட்டம்
அவனியில் பொதுமை பூக்கும்.

# தந்தையும் மைந்தனும்

அந்த மன்னன் பதவிக்கு வந்தபோது தங்கள் துன்பமெல்லாம் துடைத்தெறியப்படும் என்று மக்களெல்லாம் மிகுந்த குதூகலத்தில் மூள்கினார்கள்...... அவர்களின் மகிழ்ச்சி... அவன் பதவிக்கு வந்த அடுத்த கணமே இல்லா தொழிந்து விட்டது.

பதவிக்கு வந்த உடனேயே அவன் மக்கள் மீது... பலவித வரிச்சுமைகளையும்.. திணிக்கத் தொடங்கி விட்டான் ..

மக்கள் தமது முழு உழைப்பையும் முழு நேரத்தையும் அவனுக்குத் தாரைவார்க்கவேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களுக்கு இருந்தது.

மக்கள் ஒவ்வொரு இரவும் மிகுந்த திகிலுடனேயே கழித்தார்கள்.

"விடிந்தால் என்ன வரி வரப் போகிறதோ... அரசன் என்ன ஆணையை இடப்போகிறானோ என்று" . எதிர்பார்ப்பிலேயே அவர்களது .. இரவுகள் கழிந்து கொண்டிருந்தன

அரசனும் சளைக்காது தன் இஷ்டம் போல வரிகளையும் கட்டளைகளையும் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

வழமைபோல் ஒரு நாள் அவன் ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்தான்.

''குடிமக்களே... உங்கள் ஒவ்வொருவருக்கும்... ஒவ்வொரு காலையிலும் ஒவ்வொரு கொத்து 'நெல்லு' கொடுக்கப்படும் மாலையில் நீங்கள் ஒவ்வொரு கொத்து அரிசியாக அதைத் திருப்பித் தர வேண்டும்.''

ஒரு கொத்து நெல்லில் அரைக் கொத்து அரிசியை மட்டுமே பெற்றுக் கொண்ட மக்கள்... அரசனின் ஆணைக்கு தம்மிடமிருந்தும் மேலதிகமாக அரிசியைக் கொடுக்கவேண்டியிருந்தது...

மக்கள் கொடுங்கோல் மன்னனின் ஆட்சியைப்பற்றி... ஓயாது திட்டிக் கொண்டிருந்தார்கள் ஆனால் அதை வெளியரங்கமாகச் சொல்ல அவர்கள் பயந்திருந்தார்கள்... முதுமைப் பருவத்தையடைந்து விட்ட மன்னனுக்கு மக்களின் மனோநிலை புரிந்து விட்டது...

மரணப் படுக்கையிலிருந்த மன்னன் தன் மகனை அழைத்து...

''மகனே... என்னை எல்லோரும் நல்லவனென்று எண்ணும்படி நீ செய்யவேண்டும்!'' என்று வினயமாகக் கேட்டுக் கொண்டான்...

மகனும் தகப்பனின் இறுதி ஆசையை நிறைவேற்றுவதாக அவனுக்கு உறுதி கூறினான்.

மன்னன் மரணமடைந்ததும் மகன் பதவிக்கு வந்தான்...

வந்ததும் அவன் முதன் முதலில் ஒரு ஆணையைப் பிரகடனப் படுத்தினான்...

'குடிமக்களே... உங்களுக்கு ஒவ்வொரு கொத்து உமி கொடுக்கப்படும் . மாலையில் நீங்கள் ஒவ்வொரு கொத்து அரிசியாக அதைத் திருப்பித் தரவேண்டும் தராதவர்களின் தலை சீவப்படும்'

மக்கள் . இடிந்து போனார்கள் .. ''இவனைவிட முந்தைய மன்னன் மிகவும் நல்லவன் .'' என்று .... ஒவ்வொருவரும். .. கதைக்கத் தொடங்கி விட்டார்கள். பழைய மன்னனின் ஆசை நிறைவேறிவிட்டது.

# நிக்சன் இராஜினாமா செய்தது ஏன்?

— ஸ்ரீ தரன்

அமெரிக்க யுத்த வெறியர்களின் தலைவனும், ஜனாதிபதியுமான றிச்சேட் நிக்சன் சில நாட்களுக்கு முன் தன் பதவியை விட மனமின்றி விட்டுச் சென்றுள்ளார். ''வாட்டர் கேட்'' ஊழல் மோசடியில் சிக்கிக் கொண்ட நிக்சன் அகனின்றும் மீளமுடியாத இக் கட்டான நிலையில் தன் பதவியைத் தியாகம் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. இச் சம்பவத்துக்கு உலக முதலாளித்துவப் பத்திரிகைகள் பெரும் ஆடம்பரமான வியாக்கியானங்கள் கொடுத்துள்ளன. அமெரிக்காவின் ஜனநாயகத்தின் பாரம்பரியம், பத்திரிகைச் சுதந்திரம், தனி மனித சுதந்திரம் என்றெல்லாம் புகழ்பாடி நாற்றமெடுக்கும் அமெரிக்க ஜனநாயகத்திற்கு வாசனைத் திரவியம் பூச முற்படுகிறார்கள்.

'வாட்டர் கேட்' போன்ற ஊழல்களையும், மோசடிகளையும் ஏன் கொலைகளையும், கொள்ளைகளையும் தினம் தினம் அமெரிக்க மக்களுக்கு எதிராகவும், உலக மக்களுக்கு எதிராகவும் நடத்திவரும் அமெரிக்க கோடீஸ்வரர்கள் தமது உண்மைச் சொரூபத்தை அமெரிக்க மக்களும் உலக மக்களும் 'வாட்டர் கேட்' சம்பவத்தின் மூலம் தெரிந்து கொண்டு விடுவார்களோ என்ற பீதியினால் தாம் பதவிக்கு கொண்டு வந்த தலைவனை இராஜினாமாச் செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்தியது அமெரிக்காவின் ஜனநாயகத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

'வாட்டர் கேட்' சம்பவத்தால் மட்டும் நிக்சன் தனது பதவியை இராஜினாமாச் செய்யவில்லை என்பது மட்டும் உண்மை, நிக்சனின் இராஜினாமாவுக்கு முக்கிய காரணம் அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியாகும். நிக்சன் தனது இராஜினாமா உரையில் ''பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், உலக சமாதானத்தைப் பேணுவதற்கும் அமெரிக்காவுக்கு ஒரு முழுநேர ஜனாதிபதி வேண்டப்படுவதால்'' தான் இராஜினாமாச் செய்வதாகத் தெரிவித்தார். ''பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது'' என்ற பதம் மிக முக்கியமானதாகும். இதே பதத்தை ஊர்ஜிதப் படுத்தும் வகையில் புதிய ஜனாதிபதி தனது ஆரம்ப உரையில் அமெரிக்காவின் வளர்ந்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதும், பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்வதும் தான் தனது முதல் நடவடிக்கை எனக் கூறியுள்ளார். விரைவில் அமெரிக்கா தனது வங்கி வீதத்தை உயர்த்தும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதைத் தொடர்ந்து மேற்கு நாடுகளும் வங்கி வீதங்களை உயர்த்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படும். இப்பொருளாதாரக் காரணமே நிக்சனின் இராஜினாமாவுக்கான அடிப்படைக் காரணம்.

# புதிய யுகத்தின் விடிவுக்காக......

— பாலமுனை பாறூக்

ஊர்விழிக்கு முன்னர்
விழித் தெழுந் தோடோடி
ஏர்பூட்டி..., எங்கள்
உழைப்பை எருவாக்கி
யாருக்காய் ? யாருக்காய் ?
யாமுழைத்தோம்..
யாமுழைத்தோம்.. ?

ஊணில்லை , உடையில்லை
உறங்க இடமில்லை...!
ஏர்பூட்டிச் சீர்செய்யும்
எமக்கு இவை இல்லை !
ஏனில்லை..? ஏனில்லை..?
எமக்கேன் இவை யில்லை?

ஊரோடிக் , கடலோடி
உழைத்த பொருள் சுரண்டிக்
காரோடு மந்தக்
''கனவான்க'' ளெல்லோர்க்கும்
பாலுண்டு பழமுண்டு
பஞ்சணையில் சுகமுண்டு!
ஏது இவை ? ஏது இவை ?
என்று இனிக் கேட்போம்!

ஊரோடிக் கடலோடி
உழைத்த பொருள் சுரண்டிக்
காரோட வென்று
கயவர் இருக்கின்றார்?
கூடாது.., இந்தக்
குவலயத்தில் நாங்களெல்லாம்
மாடாமோ..? இல்லை
மானிடரே யென்றெழுந்து
ஓடோட இந்த
உலுத்தர் சூழா மழியப்
பாடுபட வென்றே
பாட்டாளி சேர்ந்தெழுவோம்!

எப்பொழுதும் போல
இப்புவியும் இருக்காது...!
இப்பொழுதே சேர்ந் தெழுந்து
இப்புவியை மாற்றிடுவோம்!
தப்பாது இப்புவியின்
சரித்திரமும் இனி மாறும்..!
சத்தியமாய் இப்புவியில்
சமத்துவமும் கண்டிடுவோம்!!

# மக்களுக்காய்.......

— முருகு கந்தராசா

வரி வரியாய் வார்த்தைகளை வடித்துவிட்டு
பெயரளவில் சோஷலிசம் பேசிக் கொண்டு
நரிக் குணத்தார் ஆடுகின்ற கூத்துப்போல
நம் வர்க்கத் தோழர்கள் நீர் ஆட வேண்டாம்
உரித்தபசுத்தோல் தரித்த ''புலிகள்'' செய்யும்
''உபத்தி''ரங்கள் நாட்டிலினி வேண் டாமென்று
சரித்திரத்தை மாற்றவெழும் மக்களுக்காய்
சனித்திடட்டும் உம் படைப்பு புரட்சி வெல்ல.

இப்பத்திரிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம், கந்தர்மடம், 54/16, ஆத்திசூடி வீதியில் வசிக்கும் க. தணிகாசலம் அவர்களால், 93, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் 1974 ஆடி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.